# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 30.07.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 211 பக்கங்கள் : 12






மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

இல.390. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433
076 284 4443

MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


# இந்து தலங்களை பௌத்த மயமாக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசாங்கம்!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் சாடல்

புதுடில்லி, ஜூலை 30

இந்து தலங்களை பௌத்த மயமாக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. அத்துடன், இந்துக்கள் மற்றும் பிற மத சிறுபான்மையினர் வழிபாட்டு தலங்கள் மற்றும் அது தொடர்பான இடங்களுக்கு செல்வதைத் தடுக்கும் நடவடிக்கையில் இலங்கை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் என்றும் அது சாடியுள்ளது.

தொல்பொருள் திணைக்களம் உள்ளிட்ட அரச திணைக்களங்கள், இராணுவம், பொலிஸார் இணைந்து மத சிறுபான்மையினரின் கலாசாரம், வழிபாடுகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளும் ஒருங்கிணைந்த மூலோபாயத்தை முன்னெடுக்கின்றனர்.

இவர்கள் தமிழர்கள் பெரும்பான்மையாக

11



# ரணிலுக்கு 11 பேரே ஆதரவு

கொழும்பு, ஜூலை 30

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க பொதுஜன பெரமுனவின் 11 உறுப்பினர்களே விருப்பம் தெரிவித்தனர் என்று அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

பொதுஜன பெரமுனவின்

11

# ரணிலுக்கு ஆதரவளிப்பதில்லை வேட்பாளரை களமிறக்குவோம்!

## தனது முடிவை அறிவித்தது பெரமுன

கொழும்பு, ஜூலை 30

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொதுஜன பெரமுன ஆதரவளிக்காது. அத்துடன், எமது "மொட்டு" சின்னத்தில் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளோம் - இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.



# அமைச்சு பதவியை துறந்தார் விஜயதாஸ

கொழும்பு, ஜூலை 30

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக விஜயதாஸ ராஜபக்ஷ தனது நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு பதவியிலிருந்து விலகினார்.

நேற்று திங்கட்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தனது பதவி விலகல் குறித்து உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடிய பின்னரே அமைச்சு பதவியிலிருந்து தான் விலகினார் என்றும் தெரிவித்தார்.

விஜயதாஸ ராஜபக்ஷ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரை சிறீ லங்கா சுதந்திர கட்சியின் வேட்பாளராக அறிவித்திருந்தார். எனினும், அந்தக் கட்சியில் நீடிக்கும் குழப்பங்களால் அந்தக் கட்சியின் பெயர் மற்றும் சின்னத்தில் போட்டியிடுவது சிக்கலாக உள்ளது. (ஐ)

# சுயேச்சையாக போட்டியிடுவதாக ரணில் அறிவித்தமை தவறானது

## பஸில் ராஜபக்ஷ தெரிவிப்பு


கொழும்பு, ஜூலை 30

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் உறுப்புரிமையை பெற்றுக்கொண்டால் அவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கலாம் - அவருக்கு ஆதரவு வழங்கலாம் என்று அறிவுறுத்தினோம். ஆனால், அவர் அதற்கு மதிப்பளிக்கவில்லை. ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் தொடர்பாக நாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சில் ஈடுபட்டபோதே அவர் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுவதாக அறிவித்தமை முற்றிலும் தவறானது என்று பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

11

# தமிழரை ஏமாற்றிவிடலாம் என்ற கொக்கரிப்புகள் இனி எடுபடாது!

## கூறினார் சுரேஷ் பிறேமச்சந்திரன்



- பா. பிரசன்னா -

யாழ்ப்பாணம், ஜூலை 30

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களை எளிதில் ஏமாற்றி விடலாம் என்ற கொக்கரிப்புகள் எடுபடாது என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ. பி. ஆர். எல். எவ்.)

11

# நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக பந்துல பொலிஸ் முறைப்பாடு!



கொழும்பு, ஜூலை 30

பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக அமைச்சர் பந்துல குணவர்த்தன பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார்.



கொழும்பு ஹோமாகம தொகுதி அமைப்பாளரான தமக்கு எந்த முன்னறிவித்தலும் வழங்

11

# சம்பிரதாய அரசியலால் மீண்டும் போர் வெடிக்கும்

## இப்படி எச்சரிக்கிறது ஐ. தே. க.

கொழும்பு, ஜூலை 30

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சம்பிரதாய அரசியல் சித்தாந்தங்களை பின்பற்றினால் நாட்டில் மீண்டும் உள்நாட்டு போர் ஏற்படும் அபாயம் உள்ளது. அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் அதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் பொறுப்பேற்க வேண்டும் - என்று பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

11

# கொலை வழக்குக்காக கெஹலிய நாளை நீதிமன்றில் முற்படுவார்!

கொழும்பு, ஜூலை 30

தரமற்ற மருந்து இறக்குமதிக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை நாளை புதன்கிழமை கண்டி மேல் நீதிமன்றில் முற்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

1999ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது, நாவலப்பிட்டி - கறுவாத்தோட்டம் பகுதியில் குண்டுத் தாக்குதல் நடத்தி ஒருவரை கொலை செய்தமை மற்றும் ஐந்து பேரை படுகாயமடைய செய்த சம்பவம்

11

# வடக்கு, கிழக்கு வாக்குகள் ரணிலுக்கு கிடைக்க செய்யவே பெரமுன தனிவழி!

## ஐக்கிய மக்கள் சக்தி இப்படி விளக்கம்

கொழும்பு, ஜூலை 30

ராஜபக்ஷக்களுடன் பயணித்தால் வடக்கு, கிழக்கு வாக்குகள் தனக்கு விழாது என்பது ரணிலுக்கு தெரியும். அதனால்தான் அரசியல் "டீல்" அடிப்படையில் மொட்டு கட்சி வேட்பாளர் ஒருவரையும் களமிறக்கப்படவுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவே இவ்வாறு குற்றஞ்சாட்டி

11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

அவர் ஒரு தெற்கின் முன்னணி தமிழ் அரசியல்வாதி. அடிக்கடி அவருடன் இலங்கை அரசியல் பற்றி பேசுவது உண்டு.

நேற்று அவரிடம் பேசிய போது, "உங்களுக்கும் கிடைத்ததா?" என்று அவரிடம் கேட்டேன். அவர் "என்ன கிடைத்ததா என்று கேட்கிறீர்கள்?" என்றார்.

"எல்லா எம். பிக்களுக்கும் கிடைத்ததாக சொல்கிறார்களே, அதுதான்" என்றேன்.

அப்போதும், அவருக்கு புரியவில்லை என்பது தெரிந்தது. அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கியதைத்தானே கேட்கிறீர்கள்?" என்று அவர் பதில் கேள்வி கேட்டார்.

அது அவரவர்கள் தத்தமது மாவட்டங்களில் செய்யவிரும்பும் அபிவிருத்தி பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு அல்லவா? நான் கேட்பது உங்கள் தனிப்பட்ட அபிவிருத்திக்கானது என்று சொன்னேன்.

அப்போதும் அவருக்கு புரியவில்லை. இனியும் அது பற்றி இப்படி பூடகமாக பேசுவது பயனில்லை என்பதால் நேரடியாகவே கேட்டேன், "இல்லை சிலருக்கு மதுபான லைசன்ஸ் கொடுத்தார்களாமே உங்களுக்குக் கிடைக்கவில்லையா" என்று.

அவர் சொன்னார், "என்னிடமும் கேட்டார்கள்தான். ஆனால், பாராளுமன்றத்தில் உள்ள இருநூற்றி இருபத்தி ஐந்து எம். பிக்களுக்கும் கொடுப்பதானால் எடுக்கிறேன் என்று சொன்னேன்", என்றார்.

இனி என்ன வடக்கு - கிழக்கில் புதிதாக மதுபான விற்பனை நிலையங்களோ அல்லது மதுபானசாலைகளோ திறக்கப்பட்டால் அவற்றின் உரிமையாளர்கள் யார் அல்லது அந்த உரிமங்களை யாரிடமிருந்து வாங்கினார்கள் என்பதை அறிய மக்கள் முண்டியடிக்கப் போகின்றார்கள்.

ஜனாதிபதி ரணிலுடன் மல்லுக்கட்டிக்கொண்டிருந்த நமது சில பாராளுமன்ற உறுப்பினர்களும் இப்போது அவருக்கு நெருக்கமாகியிருப்பதையும் சிலர் கவனிக்கத் தவறியிருக்க மாட்டார்கள்.

சரி இனி இன்று சொல்ல வந்த விடயத்துக்கு வருவோம்.

ஓர் அரசியல் கட்சி எப்படியெல்லாம் இயங்கக்கூடாதோ அப்படியெல்லாம் இயங்குவதற்கு உதாரணம் என்றால் அது நமது தமிழ் அரசு கட்சி தான். அது இன்று நீதிமன்றத்தின் படிகளை ஏறி இறங்குவதற்கு காரணமே அது கடந்த பல ஆண்டுகளாக சிலர் தாம் நினைத்தவாறு செயல்பட்டது தான் என்பது இரகசியமானது அல்ல. கட்சி தொடங்கப்பட்டபோது நாட்டில் தொகுதி வாரியாக பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இருந்தபோது ஒவ்வொரு தொகுதிக்கும் என்று கிளைகள் இருந்தன. அந்த அந்த தொகுதி எம். பிக்கள் அந்த தொகுதிக் கிளையின் தலைவர்களாக இருந்தனர். அல்லது தொகுதிக்கு தமிழ் அரசு எம். பி. இருக்கவில்லை என்றால் தொகுதியின் மூத்த தலைவர் ஒருவர் தலைவராக இருந்தார். மாவட்ட தேர்தல் முறை அமுல்படுத்தப்பட்டதும், தொகுதிக்கு பதிலாக பிரதேச சபைக் கிளைகளை தொகுதிக் கிளையாக கொள்வது என்று யாரோ சிலர் முடிவெடுத்து தமது இஷ்டப்படி பிரதேச கிளைகளிலிருந்து உறுப்பினர்களை பொதுச் சபைக்கு தெரிவுசெய்தனர்.

அதுவே இன்று நீதிமன்ற படிகளை ஏறிஇறங்க முக்கிய காரணமானது.

அதாவது கட்சியாக- ஒரு முடிவு எடுக்கப்படாமல், யாரோ சிலரோ அல்லது ஒருவரோ தாமாக முடிவெடுத்து பொதுச் சபைக்கு உறுப்பினர்களை தெரிவு செய்தனர்.

இதனை ஏற்றுக்கொண்டு தான் தலைவர் தெரிவுக்காக பொதுச்சபை கூடியிருந்ததும் அதில் சிறீதரன் வெற்றிபெற சுமந்திரன் தோற்றுப் போனதும் பழைய சங்கதிகள். ஆனால், அந்த பொதுச்சபையில் எத்தனை பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். அது கட்சி யாப்புக்கு முரணானது என்பதை தெரிந்துகொண்டுதான் போட்டியிட்டவர்களும் சரி, இப்போது அதனை நீதிமன்றத்துக்குக் கொண்டுபோனவர்களும் சரி கலந்துகொண்டிருந்தனர்.

இத்தனை நெருக்கடிகளுக்கும் காரணம், கட்சியில் ஒரு முக்கிய முடிவை கட்சியாக எடுக்கமால் தன்னிச்சையாக அதன் தலைவரோ அல்லது அவருக்கு நெருக்கமானவர்களோ செய்ததுதான் என்பதைத் தெரிந்துகொண்டும் - இப்போதும் கட்சி அதே பாணியிலேயே இயங்கிக் கொண்டிருப்பதும் தான் ஜீரணிக்க முடியாததாக இருக்கின்றது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை களம் இறக்கவேண்டும் என்பதில் தமிழ் அரசு இரண்டுபட்டு நிற்கின்றது. அதில், சுமந்திரன் அணி எதிராகவும் சிறீதரன் அணி ஆதரவாகவும் தொடர்ந்து குரல் கொடுத்துவருகின்றன.

ஆனால், கட்சி இன்னமும் அது பற்றிய இறுதி முடிவை - கட்சியாக எடுக்கவில்லை. ஆனால், சுமந்திரனோ துணிச்சலுடன், கட்சி தமிழ் வேட்பாளரை நிறுத்தாது - கட்சியின் முடிவு அது என்கிறார். அவர் சொல்வதும் சரியானதுதான். பொது வேட்பாளரை நிறத்தும் முயற்சியில் தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்புத்தான் முடிவெடுக்கவிருக்கின்றது. அதில் இணைந்து கொள்வதா அல்லது அதற்கு வெளியிலிருந்து ஆதரவு வழங்குவதா என்பதைத்தான் தமிழ் அரசு இனி முடிவெடுக்க வேண்டியுள்ளது.

ஆனால், சுமந்திரனோ கட்சி முடிவெடுக்க முன்னரே - கட்சி முடிவெடுத்து விட்டதாக தனிச்சையாக அறிவிக்கிறார். அதனை கட்சியிலுள்ள பொறுப்புள்ள எவரும் கண்டுகொண்டதாக இதுவரை தெரியவில்லை.

இவையெல்லாம் எதை உணர்த்துகின்றன? கட்சியிலுள்ள மற்றவர்களின் "தன்னம் பிக்கையை" கேள்விக்கு உள்ளாக்குகின்றன. யாழ்ப்பாண தமிழில் சொல்வதானால் முதுகெலும்பை பரிசோதனைக்கு உட்படுத்தச் சொல்கின்றனவோ?

- ஊர்க்குருவி

# தோட்ட உரிமையாளர்களுடன் டீல்; மக்களை ஏமாற்றுகிறது அரசாங்கம்!

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 30

"தோட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக் கொள்ளும் தலைவர்கள் அண்மையில், ஒரு விநோத மோசடியை நடத்தி, போலி வர்த்தமானி மூலம் 1700 ரூபாய் சம்பளம் பெற்றுத் தருவதாக தெரிவித்தனர். இது ஏமாற்று நடவடிக்கையாகும்." - என்று எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பதுளை மாவட்டம், பசறை தேர்தல் தொகுதிக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதிக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சி தலைவர் மேலும் கூறியவை வருமாறு,

தோட்ட உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடருவோம் என கூறிக் கொண்டு, தோட்ட உரிமையாளர்களுடன் டீல் போட்டுள்ளனர். இரு தரப்பையும் சமநிலைப்படுத்தி மக்களை ஏமாற்றும் கோட்பாட்டை நடைமுறைப்படுத்துகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களை விடுத்து, தோட்டத் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவோம்.

தோட்ட மக்களை கூலித் தொழிலாளிகள் என்ற நிலையில் வைத்திருப்பதற்கும், தோட்ட மக்களை லயன் அறைகளுக்குள் வைத்திருக்கவுமே ஆட்சியாளர்கள் விரும்புகிறார்கள். தோட்ட மக்களுக்கென தனி கிராமங்களை உருவாக்காமல் லயன் அறையிலான கிராமங்களை நிர்மாணிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த நாட்டின் அரச தோட்டத் துறையில், தனியார் தோட்டத் துறையில் இலட்சக்கணக்கான ஏக்கர் காணி விவசாயம் செய்யப்படாத பாழ் நிலங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலை இருந்தும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிப்பதாக ஏமாற்றி வருகின்றனர். தோட்ட மக்களை ஏமாற்றாமல், தோட்ட மக்களை நிரந்தர தொழிலாளியாக்காமல், காணியில் வீட்டு உரிமையை வழங்கி சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் - தோட்ட மக்களை பலப்படுத்துவேன்.

தோட்டத் தொழிலாளர்களும் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளராக தேயிலை உற்பத்திக்கு பங்களிக்க முடியும். சாதி, மதம், வர்க்கம், கட்சி என வேறுபாடின்றி இத்துறையில் ஆர்வமுள்ள ஏனைய இளைஞர்களும் தோட்டத் தொழில் முனைவோர் ஆக்கப்படுவர். தோட்டத் தொழிலாளர் சமூகத்தை பெருந்தோட்ட தொழில் முனைவோராக மாற்றுவேன்." - என்றார்.

(ஐ)

வடக்கு நீச்சல் போட்டி:

# தம்பாட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கு 18 பதக்கங்கள்





யாழ்ப்பாணம், ஜூலை 30

வடக்கு மாகாண பாடசாலைகள் இடையேயான நீச்சல் போட்டியில் ஊர்காவற்றுறை தம்பாட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை 18 பதக்கங்களை வென்று சாதனை படைத்தது.

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான நீச்சல் போட்டி கிளிநொச்சியில் அண்மையில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் 13 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் டென்ஸில் ராஜ் 2 தங்கம் - 1 வெள்ளி, கனிமுகிலன் 2 தங்கம் - 1 வெள்ளி, கனிஷ்ரா 1 தங்கம், யனுஷன் 3 வெள்ளி, நிஷாந்த் 1 வெள்ளி, 1 வெண்கலம், சனுசா 1 வெள்ளி பதக்கங்களை கைப்பற்றினர்.

றிலே நீச்சல் போட்டியில் 14 வயது மற்றும் 16 வயது பிரிவில் ஆண்கள் அணிகள் தலா இரண்டு வெள்ளிப் பதக்கங்களை பெற்றன.

ஒட்டுமொத்தமாக இந்தப் போட்டியில் 5 தங்கப் பதக்கங்களையும் 11 வெள்ளிப்பதக்கங்களையும், 2 வெண்கல பதக்கங்களையும் தம்பாட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை கைப்பற்றி சாதனை படைத்தது.

(ஐ)

# 2,142 சிறார் போசாக்கின்மையால் மத்திய மாகாணத்தில் பாதிப்பு!

கொழும்பு, ஜூலை 30

மத்திய மாகாணத்தின் கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களில் 5 வயதுக்கு உட்பட்ட 2 ஆயிரத்து 142 சிறுவர்கள் போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாகாணத்தில் ஐந்து வயதுக்குட்பட்ட 2 ஆயிரத்து 142 சிறுவர்கள் மிதமான போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர், 15 ஆயிரத்து 920 சிறுவர்கள் மிதமான போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் 27 ஆயிரத்து 812 ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி, கண்டி மாவட்டத்தில் 970 சிறுவர்களும், மாத்தளை மாவட்டத்தில் 461 குழந்தைகளும், நுவரெலியா மாவட்டத்தில் 711 சிறுவர்களும் கடுமையான போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், கண்டி மாவட்டத்தில் 7 ஆயிரத்து 626 சிறார்களும், மாத்தளை மாவட்டத்தில் 3 ஆயிரத்து 716 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 4 ஆயிரத்து 588 சிறுவர்களும் மிதமான போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
30.07.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், ஆடி 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தோல்விக்காக காத்திருப்பவர்கள்...!

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் அளவுக்கதிகமாகவே தடுமாறுகின்றனர். தமிழ் பொது வேட்பாளரை கண்டு நிலைகுலைந்து போயிருக்கின்றனர். இதனால், என்ன பேசுவது - எவ்வாறு பேசுவதென்று தெரியாமல் தடுமாறுகின்றனர். தமிழ் பொது வேட்பாளரால் கொழும்பிலுள்ள தமிழர்களுக்கு ஆபத்து என்னும் ஒரு புதிய கதையை சாணக்கியன் கூறியிருக்கின்றார். வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் தங்களின் அரசியல் நிலைப்பாட்டைக் கூறுவதால், எவ்வாறு கொழும்பிலுள்ள தமிழ் மக்கள் பாதிக்கப்படுவர்?

ஆரம்பத்தில் மகிந்த ராஜபக்ஷ பூச்சாண்டி காண்பிக்கப்பட்டது. ஆனால், அதனை யாரும் கண்டுகொள்ளவில்லை. பின்னர், தமிழ் மக்கள் முன்னர் வழங்கிய ஆணையை இந்த முயற்சி குழப்பிவிடும் என்னும் கதை சொல்லப்பட்டது. அதனையும் எவரும் கண்டுகொள்ளவில்லை. தற்போது கொழும்பு தமிழ் மக்களுக்கு ஆபத்தென்று இன்னொரு கதை கூறப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ் பொது வேட்பாளர் போட்டியிடுவதைத் தடுப்பதற்காக எதற்காக தமிழ் அரசுக் கட்சியின் மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தளவு முட்டிமோதுகின்றனர்? இதனை தமிழ் அரசுக் கட்சி தடுக்காமல் இருப்பது இன்னும் தவறானது.

உண்மையில், தென்னிலங்கை வேட்பாளர்கள்தான் தமிழ் பொது வேட்பாளரை கண்டு அதிகம் கலக்கமடைய வேண்டும். ஆனால், தமிழ் அரசு கட்சியை சேர்ந்தவர்கள் ஏன் அதிகம் கலக்கமடைகின்றனர்? தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை தமிழ் அரசு கட்சியின் ஓர் அணியினர் ஆதரிக்கின்றனர் என்பது உண்மையாக இருந்தாலும்கூட, தமிழ் அரசு கட்சி உத்தியோகபூர்வமான முடிவின்றித் தடுமாறுகின்றது. தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை ஆதரிப்பதற்கு எதற்காக ஒரு கட்சி தடுமாற வேண்டும்? அந்தத் தடுமாற்றத்தின் பின்னணியை ஒரு தமிழ் குடிமகன் எவ்வாறு புரிந்துகொள்வது?

தென்னிலங்கை வேட்பாளர்களை நோக்கி தமிழ் மக்களின் வாக்குகளை களவாடும் நோக்கம் வெற்றிபெற வேண்டுமாயின், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு தோற்கடிக்கப்பட வேண்டும். தமிழ் பொது வேட்பாளரை தோற்கடிப்பேன் என்று ஏற்கனவே சுமந்திரன் கூறியிருந்தார். ஒரு தமிழ் வேட்பாளரை நோக்கி தமிழ் மக்களின் வாக்குகள் திரளுவதை தோற்கடிக்க வேண்டுமென்னும் ஆசை எவ்வாறு தோன்றுகின்றது. நிச்சயமாக, தாங்கள் வெற்றிபெற வேண்டுமென்று எண்ணும் ஒருவரை வெற்றிபெறச் செய்வதற்காகவே தமிழ் பொது வேட்பளரை தோற்கடிக்க விரும்புகின்றனர். ஆனால், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை முன்கொண்டு செல்வோரின் உறுதியே இப்போது சிலரின் பிரதான பிரச்னையாக இருக்கின்றது.

இந்த பின்புலத்தில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படக்கூடாது என்பதிலேயே சுமந்திரன், சாணக்கியன் போன்றவர்கள் தீவிரமாக இருக்கின்றனர். முளையிலேயே இது கருகிவிடுமானால், இதனை தங்களின் அரசியல் நகர்வுக்கான முதலீடாகக் கொள்ளலாமென்றே அவர்கள் எண்ணுகின்றனர். இந்த பின்புலத்தில் நோக்கினால் தமிழ் மக்கள் பொதுச் சபையும் அரசியல் கட்சிகளினதும் ஒன்றுபட்ட முயற்சியின் தோல்விக்காக பலர் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் ஓர் அரசியல் படிப்பினை உண்டு. அதாவது, தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்படுவதற்கு முன்னதாகவே அது பலவாறான அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது - பலரை திரும்பிப்பார்க்க வைத்திருக்கின்றது. இந்த நிலையில், தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டால் தமிழர்களின் அரசியல் மீண்டும் மிடுக்கு பெறும் - தமிழ் பொது வேட்பாளரை நோக்கி மக்களின் வாக்குகள் திரண்டால் தமிழ்த் தேசிய அரசியல் புத்தெழுச்சி பெறும்.

இதனை நன்கு புரிந்திருப்பதால்தான் சுமந்திரன், சாணக்கியன் போன்ற தமிழ் அரசு கட்சியினர் இதனை முளையிலேயே கருக்க வேண்டுமென்று எண்ணுகின்றனர். அவதூறு, மற்றும் எச்சரிக்கை பிரசாரங்கள் மூலம் தங்களின் இலக்கை நிறைவு செய்யலாமென்று எண்ணுகின்றனர். ஆனால், இவர்களின் தடுமாற்றங்களும் செயல்பாடுகளும் ஒரு விடயத்தைத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. அதாவது, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு முற்றிலும் சரியானது. காலத்துக்குத் தேவையானது. இதனை முன்கொண்டு செல்வோர் அரசியலில் சரியான பாதையில் பயணிப்பவர்களாவர்.

# தேசிய தாதியர் மாநாட்டில் தேர்தல் சட்டம் மீறப்பட்டது

### பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 30

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய அகில இலங்கை தாதியர் மாநாட்டில் அரச தாதியர்கள் சீருடையுடன் கலந்துகொண்டமை தேர்தல் சட்டங்களை மீறும் செயலாகும் என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தேர்தல் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கும் வகையில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இதன்படி, பொதுமக்களின் வரிப் பணத்தினால் வழங்கப்படும் சீருடையை அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்துவது நிறுவனங்களின் சட்டவிதிகளையும் தேர்தல் சட்டத்தையும் மீறும் செயலாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, பாதுகாப்பு பிரதானிகள் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகள் இடையிலான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (ஐ)

# விஜயதாஸமீதான தடை செப்ரெம்பர் 24 வரை நீடிப்பு

கொழும்பு, ஜூலை 30

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பதில் தலைவரும் பதில் பொதுச் செயலாளருமான அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் சாரதி துஷ்மந்த ஆகியோர், அந்தப் பதவிகளில் பணியாற்றவும் தேர்தல் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதை தடுப்பதற்காகவும் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவு எதிர்வரும் செப்ரெம்பர் 24 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சிறீ லங்கா சுதந்திர கட்சியால் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி சந்திம எதிரிமன்னே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அதற்கமைய தற்காலிக தலைமை செயலாளர், செயல் தலைவரின் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தடை விதித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மீண்டும் நேற்று நீடிக்கப்பட்டது.

அத்துடன், எதிர்வரும் செப்ரெம்பர் 24 ஆம் திகதியன்று படைத் தரப்பு ஆட்சேபனைகளை சமர்ப்பிக்கவும் நீதிபதி உத்தரவிட்டார். சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பொருளாளரும் இராஜாங்க அமைச்சருமான லசந்த அழகியவண்ண, சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸநாயக்க மற்றும் சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் விவசாய அமைச்சருமான மகிந்த அமரவீர ஆகியோர் தாக்கல் செய்த வழக்கு நேற்று பரிசீலிக்கப்பட்டபோது இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

(ஐ)



சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கம் ஆற்றிவரும் சமயப் பணிக்காக சிறுப்பிட்டி மேற்கு நாகதம்பிரான் ஆலய நிர்வாகத்தினரால் நேற்று முன்தினம் கௌரவிக்கப்பட்டார்.

## ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 30

கோப்பாய் சந்தியில் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


கோப்பாய் பொலிஸ் பிரிவில் நேற்று அதிகாலை இந்தக் கைது இடம்பெற்றது.

அந்தப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய ஒருவரை பொலிஸார் சோதனையிட்டனர். இதன்போது, சந்தேகநபரிடம் இருந்து 11.5 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார். கைதானவர் ஏழாலையை சேர்ந்தவர் என்று தெரிய வருகின்றது.

மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-01)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 30 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - ஆடி 14
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : நசமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் ஒரே நாளில் நான் கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பின் மையால் லாபம் குறையும்.

**இடபம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும். வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். அலைச்சலுடன் ஆதாயம்.

**மிதுனம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பழைய வாடிக்கை யாளர்கள் தேடிவருவார்கள்.

**கடகம்**
உணர்ச்சிவசப்பட்டு பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப்பேசுவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். பழைய பிரச்னை களுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண் பீர்கள். உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாம லேயே தாழ்வு மனப்பான்மை தலைத்தூக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளால் அலைக்க ழிக்கப்படுவீர்கள். சகிப்புத்தன்மை தேவைப்படும்.

**துலாம்**
மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு. மனைவி வழியில் உறவினர்கள் மதிப்பார்கள். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். ஆன் மிக நாட்டம் அதிகரிக்கும். ஆதரவு கிட்டும்.

**விருச்சிகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந் துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங் கள் தீட்டுவீர்கள். அமோகமான நாள்.

**தனுசு**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்து வீர்கள். வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். வேற்றுமதத்தவர்கள் நண் பர்கள் ஆவார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

**மகரம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய கடனில் ஒரு பகு தியை பைசல் செய்வீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட் டுவார்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் அதிக ரிக்கும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத் தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

# தமிழக மக்களின் கோபத்தை மறைப்பதற்கே ஆர்ப்பாட்டம்

### தி. மு. க. அரசு மீது இ. பி. எஸ். விமர்சனம்

தூத்துக்குடி, ஜூலை 30
தி. மு. க. அரசு மீது மக்களுக்கு உள்ள கோபத்தை மறைக்கவே மத்திய அரசுக்கு எதிராக அந்தக் கட்சி ஆர்ப்பாட்ட நாடகத்தை அரங்கேற்றியுள்ளது என அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.

தூத்துக்குடியில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பின்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு முழுமையாக சீர்கெட்டு விட்டது. எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, பாலியல் கொடுமை அன்றாட நிகழ்வாக நடந்து வருகிறது.

ஒரு திறமை இல்லாத அரசாங்கமாக தி. மு. க. அரசு காணப்படுகிறது. இதனால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். போதைப் பொருளால் இளைஞர்கள், மாணவர்களை சீரழிக்க கூடிய காட்சி தொடர்கிறது. போதையால் பல கொலைகள் தமிழகத்தில் நடந்த வண்ணம் உள்ளன. இது கண்டிக்கத் தக்கது

மத்திய அரசை கண்டித்து தி. மு. க. ஓர் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. மாநிலத்துக்குத் தேவையான நிதியை மத்திய அரசு பட்ஜெட்டில் ஒதுக்க வில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்தே ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இன்று தமிழகத்தில் தி. மு. க. அரசு மீது மக்கள் கடும் கோபத்தில் உள்ளனர். தமிழகத்தில் மக்கள் விரோத ஆட்சி நடைபெறுகிறது. இதை மறைக்கவே தி. மு. க. போராட்டத்தை நடத்தியுள்ளது. இதுதான் உண்மை- என்றார். (எ)

# தமிழகத்தின் தொல்லியலை அறிய சமஸ்கிருதம்தான் ஒரே தகுதியா?

### தி. மு. கவிடம் கேள்விகளை அடுக்கிய சீமான்

சென்னை, ஜூலை 30
சமஸ்கிருதம் தெரிந்திருப்பது தான் தமிழகத்தின் தொல்லியலை அறிய ஒரே தகுதியா? என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழக அரசின் தொல்லியல் துறை பணிக்கு சமஸ்கிருதம் கட்டாயம் எனும் அறிவிப்பை அரசு திரும்பப்பெற வேண்டுமெனவும் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தவை வருமாறு, தொல்லியல்துறை தொழில்நுட்ப பணியாளர் தெரிவுக்கான புதிய அறிவிப்பில் சமஸ்கிருதம் தெரிந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்று அறிவித்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

தமிழ்நாடு தொல்லியல் துறைக்கும் சமஸ்கிருதத்துக்கும் என்ன தொடர்பு உள்ளது?. அதேபோன்று, தொல்லியல் பணிக்கு திராவிட மொழி தெரிந்திருக்க வேண்டும் என்றும் தேர்வாணையம் அறிவித்துள்ளது.

அப்படி ஒரு மொழி இருக்கிறதா? இதை முதல்வர் தான் விளக்க வேண்டும். தமிழ்மொழி என்று குறிப்பிடுவதில் தமிழக அரசுக்கு என்ன தயக்கம்? வீதிகளின் பெயர்களில் தமிழ் வரவே இத்தனை ஆண்டுகாலம் ஆகியுள்ள நிலையில், தமிழக அரசுப் பணிகளிலிருந்து அன்னைத் தமிழை அகற்ற தி. மு. க. அரசு முனைவது கொடுமையாகும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

# “தொல்லியல் பணிகளுக்கு செம்மொழி தமிழை கட்டாய தகுதியாக்க வேண்டும்”

சென்னை, ஜூலை 30
தொல்லியல் பணிகளுக்கு சமஸ்கிருதம் கட்டாயம் என்ற பகுதியை நீக்கிவிட்டு, செம்மொழி தமிழை கட்டாய தகுதியாக அறிவித்து புதிய அறிவிக்கையை வெளியிட அரசு ஆணையிட வேண்டும் என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், “தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ள ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வுக்கான அறிவிக்கையில் தொல்லியல் பணிக்கு சமஸ்கிருத பட்டப்படிப்புடன் திராவிட மொழிகள் மற்றும் பண்டைய இந்திய வரலாறு பற்றிய அறிவு கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தொல்லியல் பணிகளை மேற்கொள்வதற்கு சமஸ்கிருதப் பட்டமும், சமஸ்கிருத மொழி அறிவும் கட்டாயம் என்று அறிவிக்கப்பட்டிருப்பது அப்பட்டமான சமஸ்கிருதத் திணிப்பு. இது கடுமையாக கண்டிக்கத்தக்கது.

தொல்லியல் துறை சார்பில் ஆய்வு செய்யப்படும் கல்வெட்டுகளில் கிரந்த எழுத்துகளின் பயன்பாடுகள் இருக்கும். ஆனால், தொல்லியல் அறிவும், தமிழ்ப்புலமையும் உள்ளவர்களால் கிரந்த மொழியை நன்றாக புரிந்து கொள்ள முடியும். அதற்கு சமஸ்கிருதப் பட்டப் படிப்பு தேவையில்லை என்று அன்புமணி வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

## 2026 சட்டப்பேரவை தேர்தலில் பா. ஜ. கவுக்கு அதிக வாய்ப்பு

### அண்ணாமலை நம்பிக்கை

பெரம்பலூர், ஜூலை 30
2026 சட்டப்பேரவைத் தேர்தலில் பா. ஜ. கவுக்கு அதிக வாய்ப்பு உள்ளதாக தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

பெரம்பலூர் தனியார் கல்லூரியில் நடைபெற்ற ஹபா. ஜ. க. பூரண சக்தி கேந்திரம் எனது இலக்கு எனும் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அண்ணாமலை, பின்னர் செய்தியாளர்களிடம் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவைத் தேர்தல் முடிவுகள் தொடர்பாக மூத்த தலைவர்கள் ஆய்வுக் கூட்டம் நடத்தி, கட்சியினரின் கருத்துகளைக் கேட்டுள்ளனர். இவற்றை ஆராய்ந்து, கட்சியை வலுப்படுத்துவோம்.

மத்திய பட்ஜெட்டில் அனைத்து மாநிலங்களுக்கும் 48 இலட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தை புறக்கணிக்க முடியாது. மத்திய பட்ஜெட்டில் தமிழகத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்று தி. மு. க. பேசுவது அரசியலுக்காகத்தான். நிதி ஆயோக் கூட்டத்தில் மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி பேசும்போது ஒலிவாங்கி இணைப்பை துண்டித்துவிட்டனர் என்ற குற்றச்சாட்டை ஏற்க முடியாது. அவர் 7 நிமிடங்கள் பேசியுள்ளார்.

நிதி ஆயோக் கூட்டத்தில் தமிழக முதல்வர் ஸ்டாலின் கலந்து கொள்ளாதது வருத்தம் அளிக்கிறது. 2022 முதல் அவர் நிதி ஆயோக் கூட்டங்களில் கலந்துகொள்வது இல்லை. இவ்வாறு அரசியல் செய்வது சரியில்லை- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி வேட்பாளருக்கான செலவு வரம்பு அறிவிக்கப்படும்

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 30**

**ஜனாதிபதி தேர்தலுக்காக முன்னிலையாகும் வேட்பாளரின் செலவு வரம்பு அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

இரத்தினபுரி பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் அரச நிறுவனங்களில் பணியாற்றும் அதிகாரிகள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பான விசேட சுற்றறிக்கை எதிர்காலத்தில் வெளியிடவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேவையான அறிவுறுத்தல்கள் குறித்த விசேட சுற்றறிக்கையில் அடங்கும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

அதன்படி, அந்த விசேட சுற்றறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அது வர்த்தமானி ஊடாக வெளியிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# தேர்தல் சட்டங்களை பாதுகாக்க கோரிக்கை



கொழும்பு, ஜூலை 30

தேர்தலுக்கு முன்னதான காலப்பகுதியில் தேர்தல் சட்டத்தைப் பாதுகாப்பது ஒவ்வொரு அரசியல் கட்சி மற்றும் வேட்பாளர்களின் பொறுப்பாகும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரங்களின் போது சுற்றாடல் பாதுகாப்பையும் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலின் எதிர்வரும் நடவடிக்கைகள் குறித்து அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவிக்கவும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இதன்படி எதிர்வரும் காலங்களில் அவர்களை அழைத்து இது தொடர்பில் தெளிவுபடுத்தத் தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்பாடு செய்துள்ளது. (அ)

# காலியில் மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இருவர் காயம்!

கொழும்பு, ஜூலை 30

காலி மாவட்டத்தின் ஹபராதுவ-ஹருமல்கொட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு ஒருவரை குறிவைத்தே இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதுடன், மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முதலாவதாக இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இலக்கு வைக்கப்பட்டவர் காயமடைந்ததாகவும், காயமடைந்தவரை ஓட்டோவில் ஏற்ற முற்பட்டபோது இரண்டாவது தடவையாக ஓட்டோ மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் சாரதியும் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், காயத்தையும் பொருட்படுத்தாது, ஓட்டோச் சாரதி, ஓட்டோவை வைத்தியசாலை நோக்கிச் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டில் 34 மற்றும் 54 வயதுடைய இருவர் காயமடைந்துள்ளதாகவும், அவர்கள் ஹபராதுவ மற்றும் அகுலுகஹா பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# தபால் மூலம் வாக்களிப்புக்காக ரூ. 1.4 பில்லியன் செலவு மதிப்பு!

கொழும்பு, ஜூலை 30

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் திணைக்களத்தின் செலவினங்களைக் கணித்து, 1.4 பில்லியன் ரூபா தேவைப்படுவதற்கான விவரங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்கவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சாதாரண தபால், பதிவுத் தபால், எழுது பொருட்கள், போக்குவரத்து, நிர்வாகக் கட்டணம் உள்ளிட்ட பல செலவினங்களுக்காக இந்த மதிப்பீடு செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இந்த மதிப்பீடு ஒரு முன்னறிவிப்பு மட்டுமே என்பதால், கோரப்பட்ட பணத்தில் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# அஞ்சல் மூல வாக்களிப்புக்கு ஓக.5 வரை விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஜூலை 30

ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கால அவகாசம் எதிர்வரும் 5ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, குறித்த தினத்தில் அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கப்பெறும் வகையில் விண்ணப்பங்களை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பிவைக்குமாறு அந்த ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அஞ்சல் மூல விண்ணப்பங்கள் எதிர்வரும் 5ஆம் திகதி அஞ்சலிடப்பட்டால் அவை செல்லுபடியாகாது எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

# சீனப் பெண் உட்பட 4 பேர் விமான நிலையத்தில் கைது!

கொழும்பு, ஜூலை 30

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுகளுடன் சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் நுழைய முற்பட்ட வெளிநாட்டுப் பெண் உட்பட நான்கு பயணிகள் விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில், 29,200 சிகரெட்டுகள் அடங்கிய 146 சிகரெட் பெட்டிகளை மறைத்து வைத்திருந்த 37 வயதுடைய சீனப்பெண் ஒருவர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

மேலும், கொழும்பில் கிளப் ஒன்றில் பணிபுரியும் பெண் ஒருவரும், பாணந்துறை பிரதேசத்தில் வசிக்கும் 34 வயதுடைய நபரும், மத்துகம பிரதேசத்தில் வசிக்கும் 38 வயதுடைய சாரதி ஒருவரும் சட்டவிரோதமான முறையில் 39,000 சிகரெட்டுகள் அடங்கிய 195 பெட்டி சிகரெட்டுகளை தமது பயணப் பொதிகளில் மறைத்து வைத்திருந்த போது சுங்க அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நால்வரும் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு குற்றப்புலனாய்வு அதிகாரிகளிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு யாருக்கு?

## அடுத்த வாரம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அடுத்த வாரம் தீர்மானிக்கவுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்காக இருக்கும் என்று, அதன் பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபிக் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் நிசாம் காரியப்பரை வினவியபோது,

அடுத்த வாரம் கட்சியின் உயர்பீடம் கூடி இது தொடர்பாக ஆராய்ந்து முடிவு எடுக்கும் என அவர் தெரிவித்தார்.

# உயர்நீதிமன்றின் தீர்ப்பு தொடர்பில் கலந்துரையாடுவது பொருத்தமற்றது

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 30

தற்போதைய பொலிஸ்மா அதிபர் நியமனம் குறித்த உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பின்னர் பிரதம நீதியரசருடன் கலந்துரையாடுவது ஒழுங்கற்ற செயற்பாடு என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மொனராகலையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது, பொலிஸ்மா அதிபர் தொடர்பான பிரச்னைகளை முன்னிறுத்தி, தேர்தலை பிற்போடும் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

பொலிஸ்மா அதிபருக்கு எதிரான தீர்ப்பு தொடர்பில் தற்போது கலந்துரையாடித் தீர்வு காணவுள்ளதாகக் கூறப்படுகிறது.

நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் கலந்துரையாடுவது பொருத்தமற்றதாகும்.



அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்ற முடியாத பட்சத்தில் தற்போதைய ஜனாதிபதி பதவி விலகி அதனை நிறைவேற்றக்கூடிய ஒருவரை நியமிக்க வேண்டும் என்றார்.

# மாணவனைத் தாக்கியதாக ஆசிரியர் மீது குற்றச்சாட்டு!

யாழ்ப்பாணம், ஜூலை 30

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவன் ஒருவர், பாடசாலையில் ஆசிரியர் தாக்கியதால் பாதிக்கப்பட்டதாக குறிப்பிட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இந்த தாக்குதல் சம்பவம் நடந்ததாக பாதிக்கப்பட்ட மாணவனின் பெற்றோர் தெரிவித்தனர்.

தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவனை ஆசிரியர் தாக்கியதாகவும், இதனால் மாணவனின் காதுப்பகுதி பாதிக்கப்பட்டதாகவும், மாணவனின் பெற்றோர் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட மாணவன் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்.

வகுப்பறையில் நடந்த விவகாரமொன்றையடுத்து மாணவனை இழுத்துச் சென்று ஆசிரியர் தாக்கியதாக மாணவனின் பெற்றோர் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவுடன் பங்காளித்துவத்தை இலங்கை மேலும் வலுவாக்கும்!

## சபாநாயகர் மகிந்த யாப்பா அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

**சீனாவுடனான தமது பங்காளித்துவத்தை வலுப்படுத்துவதற்கு இலங்கை தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.**



சீன ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சீனாவின் ஒத்துழைப்பு காரணமாகக் கொழும்பு துறைமுக நகரம் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற முதன்மையான திட்டங்களின் விரிவாக்கம் சாத்தியமாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

துறைமுக நகரம் முழுவதும் சீனாவின் முதலீடாகும்.

இலங்கை அதனை அங்கீகரித்துள்ளது.

அத்துடன் முதலீட்டாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் பாராளுமன்றத்தில் சட்டமும் இயற்றப்பட்டுள்ளது.

இது முதலீட்டாளர்களுக்கு நன்மை பயப்பதுடன், முதலீட்டாளர்களுக்கு ஏற்றவாறு, அவர்களின் முதலீடுகளைப் பாதிக்காத வகையிலும் குறித்த சட்டம் அமுல்படுத்தப்படும்.

அத்துடன், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான வரலாற்று வர்த்தக உறவுகளை மேலும் வலுவாக்குவோம். நாட்டின் மூலோபாய இருப்பிடம் மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியத்திற்கான நுழைவாயிலாக இலங்கையின் வகிபாகம் முக்கியமானது-என்றார். (அ)

# பாலியல் வன்கொடுமை; 290 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, ஜூலை 30

இந்த வருடத்தின் முதல் 6 மாத காலப்பகுதியில் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை தொடர்பிலான 290 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன்படி கொழும்பு மாவட்டத்திலிருந்தே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து கம்பஹா மற்றும் குருநாகல் மாவட்டங்களிலிருந்தும் இது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுவதாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

# சுங்க அதிகாரி திடீர் மரணம்!

கொழும்பு, ஜூலை 30

மத்தள சர்வதேச விமான நிலையத்தில் கடமையாற்றிய சுங்க அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

சுங்க அதிகாரிகளின் ஓய்வறையில் இருந்தபோது அவர் திடீரென உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர் பன்னிபிட்டிய பகுதியைச் சேர்ந்தவர் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த அதிகாரியின் மரணத்திற்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மத்தள பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# டிஜிற்றல் மயமாகவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்

## ஸ்மார்ட் தொலைபேசி மூலம் பயன்படுத்திக்கொள்ளலாம்

கொழும்பு, ஜூலை 30

இலங்கையில் தற்போது பாவனையில் உள்ள சாரதி அனுமதிப்பத்திரத்தை இலத்திரனியல் முறைமைக்கு மாற்றப்படுபோவதாக அண்மைய காலங்களில் கலந்துரையாடப்பட்டு வந்தாலும், தற்போது அதை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாக சாரதி அனுமதிபத்தி அச்சிடும் பிரிவின் பிரதி ஆணையாளர் சுரங்கி பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

முன்னைய பாரம்பரிய முறையின் கீழ் இனிவரும் காலங்களில் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பத்தை விண்ணப்பிக்க தேவையில்லை.

மாறாக இருந்த இடத்தில் இருந்தவாறே பத்திரத்தை புதுப்பித்தல், காணாமல்போன சாரதி அனுமதிப்பத்திரத்தை மீளப் பெற்றுக்கொள்ளல் போன்ற செயற்பாடுகளை எதிர்காலத்தில் இலத்திரனியல் முறையில் முன்னெடுக்க எதிர்பார்க்கின்றோம்.

மேலும், இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக நேரம் மற்றும் பணத்தை மீதப்படுத்த முடியும். தங்களின் ஸ்மார்ட் கையடக்க தொலைபேசியில் இந்த சாரதி அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்திக்கொள்ள முடியும்.

இதற்காகவே பிரத்தியேகமான செயலி ஒன்றும் நடைமுறையில் பரீட்சார்த்த மட்டத்தில் உள்ளது-என்றார். (அ)

## ஜனாதிபதி தேர்தல்

# பொலிஸ் சோதனைச் சாவடிகளை நாடு முழுக்க அமைக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 30

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு நாடாளவிய ரீதியில் தேர்தல் பாதுகாப்பு கடமைகளுக்காக பொலிஸ் சோதனைச் சாவடிகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பொலிஸ் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டதும் ஒவ்வொரு பிரிவுக்கும் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகளும், அப்பகுதியில் உள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களும் அவற்றின் செயல்பாட்டை மேற்பார்வை செய்வார்கள்.

பொலிஸ் சோதனைச் சாவடிகளில் தேர்தல் வன்முறை மற்றும் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை கண்காணிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இதேவேளை தேர்தல் தொடர்பான பொலிஸ் பிரிவு பொலிஸ் தலைமையகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பொறுப்பு அதிகாரிகளுடன் செயற்படும் இந்தப் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப்பாளரால் மேற்பார்வை செய்யப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கடமைகளை மேற்பார்வையிடுவதற்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட, மற்றுமொரு பிரதிப் பொலிஸ் மாஅதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்பார்வையிட ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே.வி.டி.ஏ.ஜே. அசங்க கரவிட்ட , எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றார்.

மாவட்டங்களில் ஒருங்கிணைப்புக்காக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# பாவனைக்குதவாத பொருள் விற்பனை; 11,261 வர்த்தக நிலையங்கள் மீது வழக்கு

கொழும்பு, ஜூலை 30

கடந்த ஆறு மாதங்களில் மனித பாவனைக்குப் பொருத்தமற்ற உணவுகளை விற்பனை செய்த 11,261 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன இதனைத் தெரிவித்தார்.

பொதுச் சுகாதார பரிசோதகர்களால் முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது சுகாதாரமற்ற முறையிலும், காலாவதியான திகதியுடனும் உணவுப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த சில வர்த்தகர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

எனவே பொதுமக்கள் உணவுப்பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது, அவற்றின் தரம் தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டும் என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன கோரியுள்ளார். (அ)

# நாட்டில் உள்ள வனவளப் பரப்பை 32 வீதமாக அதிகரிக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 30

நாட்டில் தற்போது 29 சதவீதமாகவுள்ள வனவள பரப்பை 2030ஆம் ஆண்டுக்குள் 32 சதவீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்காக வர்த்தமானியில் அறிவிக்கப்படாத சுமார் 144,000 ஹெக்ரேயர் பரப்பைப் புதிதாகக் காடுகளாக உள்வாங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அத்துடன் காடுகளுக்கு அப்பால், மரங்களை நடுவதன் மூலம் மக்களுக்குப் பலன்களை வழங்கும் நோக்கில், புதிய சட்டத்தைத் தயாரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி கூறினார். (அ)

# அதிரடியாக ரத்து செய்யப்பட்ட சஜித் பங்கேற்கும் 8 கூட்டங்கள்!

அம்பாறை, ஜூலை 30

அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச நேற்று நடத்தவிருந்த இருந்த எட்டு கூட்டங்கள் திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளன.

பின்தங்கிய பிரதேசத்தைச் சேர்ந்த எட்டு பாடசாலைகளுக்கு சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் அறைக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுகளே இவ்விதம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக சஜித் பிரேமதாசவின் இணைப்பாளர் வி. வினோகாந்த் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந் நிகழ்வுகள், முன் கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும் ஜனாதிபதித் தேர்தல் விதிமுறைகளுக்கமைவாக இந் நிகழ்வுகள் ரத்து செய்யப்பட்டன.

அதாவது தேர்தல் ஆணையகத்தினால் ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பிற்பாடு இத்தகைய நிகழ்வை நடத்துவது தேர்தல் விதிமுறைகளை மீறும் செயலாகும் என்ற காரணத்தினால் இவை ரத்து செய்யப்பட்டுள்ளன.

அம்பாறையில் இருந்து தேர்தல் ஆணைக்குழுவுக்குச் சென்ற முறைப்பாட்டை அடுத்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் நடைமுறை விதிகளுக்கு அமைவாக இந்த நிகழ்வுகள் ரத்து செய்யப்பட்டுள்ளன -என்றார். (அ)

# மேலும் 751 பேர் கைது

கொழும்பு, ஜூலை 30

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின்போது போதைப் பொருள் குற்றம் தொடர்பில் 751 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 745 ஆண்களும் 06 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 12 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், 05 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 231 கிராம் 74 மில்லி கிராம் ஹெரோயின், 406 கிராம் 962 மில்லி கிராம் ஐஸ், 23,297 கிராம் 457 மில்லி கிராம் கஞ்சா, 114 போதை மாத்திரைகள் மற்றும் 5,734 கஞ்சா செடிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை வேறொரு தினத்தில் நடத்த தாம் தயாராக இல்லை!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 30

**ஜனாதிபதித் தேர்தலை செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதிக்கு அப்பால் வேறொரு தினத்தில் நடத்த தாம் தயாராக இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதித் தேர்தலை செப்ரெம்பர் 21ஆம் திகதி நடத்தத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தேர்தல் என்பது மக்களின் இறையாண்மையின் ஒரு பகுதி எனவும் அதனை மீற இடமளிக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அரசியலமைப்பின் 106 ஆவது சரத்தின் பிரகாரம் நாட்டில் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

அதற்கு பூரண ஆதரவை வழங்குவது அனைவரினதும் முக்கிய கடமையாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, பொலிஸ்மா அதிபரின் நியமனம் சட்டவிரோதமானது என்றும் அதற்குத் தடை விதிக்க வேண்டுமென உயர்நீதிமன்றம் கூறுகிறது.

எனினும், இது சட்டபூர்வமானது என்று பாராளுமன்றம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, சபாநாயகருடனும் பிரதம நீதியரசருடனும் கலந்துரையாடி பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் எழுந்துள்ள பிரச்னைக்கு ஒரு வாரத்தில் தீர்வு காணப்படும்.

எனவே சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கான சூழல் ஏற்படுத்தப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (அ)



# வவுனியா பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஜூலை 30

வவுனியா பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நேற்று திங்கட்கிழமை அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வியாழக்கிழமை வவுனியா பம்பைமடு பகுதியில் அஸ்வெசும திட்டத்திற்கான பெயர்ப் பதிவுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது அங்கு வருகை தந்த பொதுமகன் ஒருவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்தியமைக்கு கண்டனம் தெரிவித்து அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அரச உத்தியோகத்தர்களுக்கு பாதுகாப்பை வழங்கு, அவர்கள் தங்கள் கடமைகளை செய்ய விடு போன்ற கோஷங்கள் எழுப்பியவாறும் பதாகைகளை தாங்கியவாறும் அவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் இதில் கலந்து கொண்டனர். (அ)

# ஜனாஸா எரிப்பு விவகாரம்: சட்ட நடவடிக்கை வேண்டும்!

## வலியுறுத்துகிறார் சஜித்

கொழும்பு, ஜூலை 30

நாட்டிலுள்ள ஒரு இனத்தையும், ஒரு மதத்தையும் இலக்கு வைத்து, அதன் பாரம்பரியங்களுக்கு எதிராக முட்டாள்தனமான முடிவுகளை எடுத்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 383 ஆவது நிகழ்வு பாணந்துறை, ஜீலான் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு இனத்தையும், ஒரு மதத்தையும் இலக்கு வைத்து, நாட்டின் ஆட்சியாளர்கள் எடுக்கும் கீழ்த்தரமான முடிவுகளால் குறிப்பிட்டதொரு சமூகத்தினர் பாதிக்கப்பட்டனர்.

அண்மையில் இதற்கு ஆட்சியாளர்கள் மன்னிப்பும் கேட்டனர். நல்ல விடயம் தான். ஆனால் ஒரு இனத்தையும், ஒரு மதத்தையும் குறிவைத்து எடுக்கப்பட்ட அர்த்தமற்ற முடிவுகளால் பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு, வலுக்கட்டாயமாக தகனம் செய்த கீழ்த்தரமான செயலுக்கான இழப்பீட்டை இந்த அரசாங்கம் வழங்க வேண்டும்.

இல்லையேல் இந்த ஆண்டு இறுதிக்குள் அதனை வழங்க நான் நடவடிக்கை எடுப்பேன். முட்டாள்தனமான முடிவுகளை எடுத்தவர்கள் மீது சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்.

ஸ்மார்ட் சமூகம் இவ்வாறான முட்டாள்தனமான முடிவுகளை எடுக்கும் குடிமக்களை உருவாக்காது. பாலஸ்தீன மக்கள் எதிர்நோக்கும் பிரச்னையில் தெளிவான நிலைப்பாட்டில் நான் இருக்கிறேன்.

இஸ்ரேலும் பலஸ்தீனும் நல்லிணக்கத்துடனும் சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டும்.

பலஸ்தீன மக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டு வரும் இழிவான செயலை வன்மையாக கண்டிக்கிறேன்.

மனித நேயத்திற்கு முதலிடம் வழங்க வேண்டும். அதன் மூலம் உலக சமாதானத்தை ஏற்படுத்த முடியும்-என்றார். (அ)

# கனகாம்பிகைக்குளம் அடாத்தாகப் பிடிப்பு; கண்டித்து பொதுமக்கள் நேற்று போராட்டம்





கிளிநொச்சி, ஜூலை 30

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கனகாம்பிகைக்குளத்தின் ஒரு பகுதி சட்டவிரோதமாக தனிநபர் ஒருவரால் மண் நிரப்பட்டு அடாத்தாக பிடிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது மக்கள் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10 மணியளவில் ஏ-9 வீதியில் கனகாம்பிகை குளம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதியில் ஒன்று கூடிய பொது மக்கள் குளம் மண் நிரப்பட்டு அடாத்தாக பிடிக்கப்பட்டமையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

கிளிநொச்சி கனகாம்பிகை குளத்தின் ஏ-9 வீதியோடு அண்டியதாக சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவு குளத்தை தனிநபர் ஒருவர் மண் நிரப்பி பிடித்துள்ள நிலையில் குறித்த குளத்தின் பின்பகுதி முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்ட பகுதியில் சுமார் 20 ஏக்கர் வரையான குளத்தின் பகுதிகளும் வேலியிட்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டே ஒன்று சேர்ந்த பொதுமக்கள், குளம் எங்களின் சொத்து, அனுமதிக்க மாட்மோம், அனுமதிக்கமாட்டோம் குளத்தை பிடிப்பதனை அனுமதிக்கமாட்டோம், விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் மண் அள்ளி போடாதே, என பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் எஸ். முரளிதரன், கரைச்சி பிரதேச செயலாளர் முகுந்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் ஆகியோர் சென்றிருந்தனர்.

அங்கு பொது மக்களுடன் கலந்துரையாடிய பின்னர் குளத்தினை அடாத்தாக பிடித்தவரின் ஆவணங்களை பரிசோதித்தபோது அவர்களிடம் அதற்கான எவ்வித ஆவணங்களும் இன்மையால் உடனடியாக இரண்டு நாட்களுக்குள் நிரப்பட்ட மண்ணை அகற்றி குளத்தை வழமைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட அரசாங்க அதிபர் முரளிதரன் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு பணிப்புரை வழங்கினார்.

குளம் ஆக்கிரமிக்கப்படுவதன் மூலம் விவசாயிகள் மட்டுமல்ல சுற்றியுள்ள பொது மக்கள் உட்பட சுற்றுப்புறச் சூழல் கால்நடைகள் என எல்லாவற்றுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படும். இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகள் அனுமதித்தால் ஒருவர் இருவராகி இருவர் பலராகி எதிர்காலத்தில் குளமே காணமல் போய்விடும்.

இவ்வாறு பல குளங்களுக்கு நடந்துள்ளது. எனவே இவ்வாறான நடவடிக்கைகளை ஒரு போதும் அனுமதிக்க முடியாது -என்றார். (அ)

# முட்டையின் விலை குறையும்!

கொழும்பு, ஜூலை 30

இன்னும் ஒரு மாதத்தில் உள்ளூர் முட்டை ஒன்றின் விலை 38 ரூபாவாக குறைக்கப்படும் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் செயலாளர் ரத்னசிறி அழகக்கோன் தெரிவித்துள்ளார்.

முட்டை உற்பத்தி நுகர்வுக்குத் தேவையான அளவை விட அதிகமாக இருப்பதால் டிசெம்பர் மாதத்திற்குள் முட்டைகள் அதிகமாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

தற்போது மாதத்திற்கு 6 லட்சம் முட்டைகள் உற்பத்தியாகி வருவதால், இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

முட்டை இறக்குமதிச் செலவை உள்ளூர் முட்டைத் தொழிலை மேம்படுத்த பயன்படுத்தினால், நுகர்வோர் பாதுகாக்கப்படுவார்கள் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (அ)

# அனுமதியின்றி இரத்தினக்கல் அகழ்ந்த நான்கு பேர் சிக்கினர்!

கொழும்பு, ஜூலை 30

பொகவந்தலாவை பகுதியில் இரத்தினக்கற்கள் அகழ்ந்த நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவை பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அனுமதியின்றி இரத்தினக்கற்கள் அகழ்தல் செயற்பாடு இடம்பெற்று வருவதாக பொலிஸார் கூறினர்.

கைதான நால்வரும் பொகவந்தலாவை பிரதேசத்தில் வசிப்பவர்கள். இவர்களிடமிருந்து இரத்தினக்கற்கள் அகழ்வதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டிறைச்சி மாயம்

# நான்கு பொலிஸாருக்கு தண்டனை இடமாற்றம்

அக்கரைப்பற்று, ஜூலை 30

**பொலிஸ் நிலைய குளிரூட்டியில் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த ஆட்டிறைச்சி காணாமல் போன சம்பவத்தை அடுத்து நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தண்டனை இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.**

கடந்த வெள்ளிக்கிழமை அன்று அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அட்டாளைச்சேனை பகுதி வீடு ஒன்றில் அறுக்கப்பட்ட ஆடுகள் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் விலங்குகள் அறுக்கும் தொழுவத்தில் அறுக்கப்படாமல் அட்டாளைச்சேனை பகுதியில் உள்ள ஒரு வீட்டில் வைத்து நான்கு ஆடுகளை அறுத்த கடை உரிமையாளரை பொலிஸார் கைது செய்தனர்.

பின்னர் குறித்த சந்தேக நபர் அக்கரைப்பற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார். தனது வீட்டு நிகழ்வு ஒன்றிக்கு குறித்த ஆடுகளை அறுத்திருந்தாகவும் குற்றத்தை ஏற்றுக்கொள்வதாகவும் அந்த நபர் தெரிவித்தார். குறித்த வழக்கின் சான்றுப் பொருளான ஆட்டிறைச்சி பொலிஸ் நிலையத்தில் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். இந்த நிலையில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்துக்கு குறித்த சான்றுப் பொருளை பார்வையிட நீதிவான் சென்ற வேளையில் ஆட்டிறைச்சி மூட்டையில் கட்டி பெக்கோ இயந்திரத்தில் புதைப்பதற்கு தயாராக வைத்திருந்ததை அவதானித்துள்ளார்.

குறித்த சான்றுப் பொருள் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்டிருப்பதாக ஏற்கனவே கூறிய பொலிஸார் திடீரென பெக்கோ இயந்திரத்தில் வைத்திருப்பது பெரும் சந்தேகத்தை நீதிவானுக்கு ஏற்படுத்தியிருந்தது. யாரும் எதிர்பாராத வண்ணம் நீதிவான் பெக்கோவில் இருந்த ஆட்டிறைச்சி மூட்டையைப் பிரிக்குமாறு பணித்திருந்தார். இதன்போது குறித்த ஆட்டின் பின்னங்கால் மற்றும் சதைகள் யாவும் மாயமாக மறைந்திருந்தன. இது பற்றி வினவிய போது ஆட்டிறைச்சியின் சில பகுதிகளை பொலிஸார் எடுத்துச் சென்றது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அக்கரைப்பற்று நீதிமன்ற நீதவான் ஏ. சி. றிஸ்வான் அக்கரைப்பற்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு கடந்த வெள்ளிக் கிழமையன்று விசாரணை நடத்துமாறு உத்தரவு பிறப்பித்திருந்தார். இதனடிப்படையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஆட்டிறைச்சியைக் கொண்டு சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் 4 பேருக்கு எதிராக அக்கரைப்பற்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விசாரணை மேற்கொண்டு அதனடிப்படையில் குறித்த ஆட்டிறைச்சியை கொண்டு சென்ற பொலிஸ் அதிகாரிகளுக்கும் உடனடியாக தண்டனை இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (எ)



# மருத்துவமனைகளுக்கு திடீரென சென்று ஆய்வு

கல்முனை, ஜூலை 30

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் மருத்துவமனைகளுக்கு திடீரென சென்று ஆய்வுகளை மேற்கொண்டனர்.

அட்டாளைச்சேனை பிரதேச மருத்துவமனை மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் என்பனவற்றுக்கு வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸதீன் தலைமையிலான குழுவினரே சென்று ஆய்வுகளை மேற்கொண்டனர்.

அங்கு உத்தியோகத்தர்கள், ஊழியர்களுடன் கலந்துரையாடி நிறுவனங்களில் காணப்படுகின்ற குறைபாடுகளை மதிப்பீடு செய்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கான பொறிமுறைகள் தொடர்பிலும் ஆராய்ந்ததுடன் சிலவற்றை உடனடியாக தீர்த்தும் வைத்தனர். (எ)



# இரு அணிகள் சம்பியன்

நிந்தவூர், ஜூலை 30

நிந்தவூர் அல் - அஷ்ரக் தேசிய பாடசாலையின் 16, 18 மற்றும் 20 வயது பட்மிண்டன் அணிகள் தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டன.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட பட்மிண்டன் போட்டிகள் திருகோணமலை மெக்கெய்சர் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றன.

இதில் பங்குபற்றிய நிந்தவூர் அல் - அஷ்ரக் தேசிய பாடசாலையின் 16 மற்றும் 20 வயது பிரிவு பட்மிண்டன் அணிகள் இரண்டும் சம்பியன்களாகவும், 18 வயது பட்மிண்டன் அணி மூன்றாம் இடத்தையும் வென்று வரலாற்றுச் சாதனையுடன் தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. (எ)

# போசாக்கு குறைபாட்டை நிவர்த்தி செய்ய உயர்மட்ட கலந்துரையாடலில் தீர்மானம்

கல்முனை, ஜூலை 30

கல்முனை பிராந்தியத்தில் காணப்படும் போசாக்கு குறைபாடுகளின் நிலைமை தொடர்பில் தெளிவூட்டி அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் விவசாய மற்றும் கால்நடை திணைக்கள உயர் அதிகாரிகளுடனான உயர்மட்ட கலந்துரையாடலொன்று காரைதீவு சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு குறித்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் விவசாய மற்றும் கால்நடை திணைக்கள உயர் அதிகாரிகள், சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார மருத்துவ தாதியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு மருத்துவ அதிகாரி எம். எச். றிஸ்பின், கல்முனை பிராந்தியத்தில் காணப்படும் போசாக்கு குறைபாடு, அதனால் ஏற்படும் தாக்கங்கள் குறித்தும் இதன்போது தெளிவாக விளக்கினார்.

எதிர்காலத்தில் உணவு உற்பத்தியும் உணவு உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்ப உதவிகளையும் விவசாய மற்றும் கால்நடைத் திணைக்களங்கள் வழங்குமிடத்து கல்முனை பிராந்தியத்தில் போசாக்கு குறைபாட்டை நிவர்த்தி செய்ய முடியும் என்கின்ற நம்பிக்கை உள்ளதாகவும் மருத்துவர் றிஸ்பின் குறிப்பிட்டார்.

இதேவேளை, பாடசாலைகளில் போசாக்குள்ள உணவுகளை ஊக்கப்படுத்தும் முகமாக விவசாய போதனாசிரியர்கள் ஊடாக விழிப்பூட்டல் நிகழ்வுகளை நடத்துதல்.

பாடசாலைகளில் வழங்கப்படும் காலை உணவுகளில் இரண்டு தினங்கள் பசுப்பால் மற்றும் முட்டை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளல்.

நிந்தவூர் அல்-மஸ்ஹர் பெண்கள் பாடசாலையில் மாதிரி சிற்றுண்டிச்சாலை மற்றும் மாதிரி பாடசாலை தோட்டம் ஒன்றையும் முதல் கட்டமாக ஆரம்பித்தல்.

போசாக்குள்ள ஆரோக்கிய உணவுகளை மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய இயற்கையான உணவுகளை விற்பனை செய்வதற்கான (ஹெல போஜன) நிலையம் ஒன்றை கரையோர பிராந்தியத்தில் அமைப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என பல முக்கிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. (எ)

# “இம்ரான்கானை இலங்கைக்கு அழைத்து ஜனாஸா எரிப்பை முடித்து வைத்தோம்”

இறக்காமம், ஜூலை 30

கொடுங்கோல் ஆட்சி செய்த கோட்டாவின் குகைக்குள் காலை 10 மணிக்கு சிங்கமாகச் சென்ற பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் எங்களுடைய இந்த முஸ்லிம்களை பற்ற வைக்கின்றீர்கள், சாம்பலாக்குகின்றீர்கள். உங்களுக்கு கொடுக்கின்ற அவகாசம் இன்னும் பத்து மணித்தியாலங்கள். நான் வந்த விமானம் இன்னும் பத்து மணித்தியாலத்தில் பாகிஸ்தானுக்கு செல்ல வேண்டும். இல்லை என்றால் உலகில் உள்ள 54 முஸ்லிம் நாடுகளையும் ஒன்று திரட்டி உங்களை உலகின் சர்வதேச நீதிமன்றத்தில் குற்றவாளியாக நிறுத்துவேன் என எச்சரிக்கை விடுத்தார் என திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச். எம். முகம்மட் ஹரீஸ் தெரிவித்தார்.

அம்பாறை - இறக்காமம் பிரதேசத்தில் நடைபெற்ற பள்ளிவாசல் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அன்று கொரோனாவால் சிக்கிய முஸ்லிம்களின் ஜனாஸா எரிக்கப்பட்ட போது நாங்கள் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தோம். வெள்ளைக் கொடிகளை ஏந்தி உரிமைக்காக ஏங்கி நின்றோம். மரணமானவர்களின் குடும்பங்கள் தமது மரணித்த உறவினரின் சாம்பல் தான் வீட்டுக்கு வரப்போகிறது என்று கவலையில் இருந்த போது கொடுங்கோல் ஆட்சி செய்தவர்களோடு நாங்கள் பேசியதுடன் மன்றாடினோம். அவர்கள் மறுத்த போது இந்த ஜனாஸாக்கள் எரிப்பதை தடுத்து நிறுத்த வேண்டும் என்பதற்காக நாங்கள் எங்களையே அடமானம் வைத்து பல்வேறு வேலைத் திட்டங்களில் இறங்கி பணியாற்றினோம்.

அதனொரு கட்டமாக தான் எமது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் பாகிஸ்தான் தூதுவராலயத்துக்கு அழைத்துச் சென்றோம். எங்களுக்கு உதவிக் கரங்கள் கொடுங்கள் என்று அவர்களிடம் கேட்டோம். கவலைப்பட வேண்டாம் என்று கூறி இலங்கைக்கு வந்து இந்த பிரச்னையை தீர்ப்போம் என அன்றிருந்த பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் எமக்கு ஆறுதல் தெரிவித்தார். ஆனாலும் எமக்கு பக்கத்தில் இருக்கும் பெரிய நாடுகள் எதுவும் இந்த ஜனாஸா எரிப்பை நிறுத்த எமக்கு ஆதரவாக வரவில்லை என்பது வேதனையான விடயம்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிஸ்புல்லா மீது தாக்குதலுக்கு தயாராகும் இஸ்ரேல் இராணுவம்



ஜெருசலேம், ஜூலை 30

**லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா போராளிகள் குழு மீது தாக்குதல் நடத்த இஸ்ரேல் இராணுவம் தயாராகி வருகிறது.**

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் போராளிகளுக்கு ஈரான் ஆதரவுடன் ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களும், லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா போராளி குழுவினரும் ஆதரவு வழங்கி வருகின்றனர்.

குறிப்பாக, இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் நடத்திய கடந்த ஆண்டு ஒக்டோபர் முதல் இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா போராளி குழுவினரும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். லெபனானில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற அரசு செயல்பட்டு வரும் நிலையில் நாட்டின் தெற்கு பகுதியில் ஹிஸ்புல்லா ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அங்கிருந்து இஸ்ரேலின் வடக்கு பகுதியில் அவ்வப்போது ட்ரோன் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்த நிலையில், இஸ்ரேலின் கோலான் ஹைட்ஸ் நகரில் மஜ்தல் ஷம்ஸ் பகுதியில் உள்ள உதைபந்தாட்ட மைதானம் மீது ஹிஸ்புல்லா குழுவினர் ட்ரோன் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர், சிறுமிகள் 12 பேர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறுகையில், இந்தத் தாக்குதலுக்கு இதுவரை கொடுக்காத விலையை ஹிஸ்புல்லா கொடுக்கும் என்றார். அதே போன்று, இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், ஹிஸ்புல்லா அனைத்து சிவப்பு கோடுகளையும் தாண்டிவிட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஹிஸ்புல்லா போராளிகளின் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்க இஸ்ரேல் தற்போது தயாராகி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பில் பிரதமர், பாதுகாப்புத்துறை அதிகாரிகள் உட்பட இஸ்ரேல் அரசில் உள்ள முக்கிய நபர்கள் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

அதேவேளை, லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா போராளி குழுவினரை குறிவைத்து மிகப்பெரிய அளவில் தாக்குதல் நடத்த இஸ்ரேல் தயாராகி வருகிறது. ஏற்கனவே காஸா முனையில் ஹமாஸ் போராளி குழுவினருக்கு எதிரான போரில் இறங்கியுள்ள இஸ்ரேல் ஹிஸ்புல்லாவுக்கு எதிராவும் போர் தொடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சூழ்நிலையை பயன்படுத்தி ஹவுதி கிளர்ச்சியாளர்களும் இஸ்ரேல் மீது தாக்குதலை தீவிரப்படுத்தலாம். மேலும், ஈரானும் இஸ்ரேல் மீதான தாக்குதலை தீவிரப்படுத்த கிளர்ச்சிக் குழுக்களுக்கு அதிக ஆயுதங்களை வழங்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் லெபனான் மீது தாக்குதல் நடத்தினால் இஸ்ரேல் எதிர்பாராத விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது. (எ)



# மண்சரிவில் சிக்கி 11 பேர் உயிரிழப்பு

பீஜிங், ஜூலை 30

சீனாவின் கிழக்குப் பகுதியில் கேமி புயலால் கனமழை பெய்து வருகிறது. இந்த நிலையில், மண்சரிவில் சிக்கி 11 பேர் பலியாகினர்.

தென்கிழக்கு பகுதியில் பெய்து வரும் கனமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

ஹூனான் மாகாணத்தில் உள்ள ஹெங்யாங் நகரில் ஒரு வீட்டில் மண்சரிவு ஏற்பட்டது. இதில் 11 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 6 பேர் பலத்த காயமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கனமழையால் மலைப்பகுதிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியதால் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. கேமி புயல் சீனாவை அடைவதற்கு முன்பு பிலிப்பைன்ஸில் பெய்த கனமழையால் 34 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## பயங்கரவாதிகள் 38 பேர் சிக்கினர்

கராச்சி, ஜூலை 30

பாகிஸ்தானில் பயங்கரவாதிகள் 38 பேர் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தின் கிழக்குப் பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கியுள்ளனர் என பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து, அந்த நாட்டின் பயங்கரவாத ஒழிப்புத் துறையை சேர்ந்த பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இதன்போது, தெஹ்ரீக் இ தலிபான் பாகிஸ்தான் என்ற அமைப்பின் உறுப்பினர்கள், அல் கொய்தா இயக்க உறுப்பினர்கள் மற்றும் ஐ. எஸ். அமைப்பை சேர்ந்த 38 பயங்கரவாதிகளை கைது செய்தனர்.

இந்தச் சோதனையில் அதிகளவிலான வெடிகுண்டுகள், கைக்குண்டுகள், ஆயுதங்கள், தொலைபேசிகள், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயத் தாள்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டன. (எ)

# வளைகுடா நாடுகளில் மீண்டும் போர் பதற்றம்

சனா, ஜூலை 30

ஏமன் விமான நிலையம் மீது அமெரிக்கா மீண்டும் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது.

இஸ்ரேல் மீதான தாக்குதலுக்குப் பதிலடியாக ஏமன் விமான நிலையம் மீது இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் வளைகுடா நாடுகளில் போர்ப்பதற்றம் தீவிரமடைந்துள்ளது.

இஸ்ரேல் - காஸா போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவாக ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செயல்படுகின்றனர். எனவே, செங்கடல் வழியாக செல்லும் இஸ்ரேல் மற்றும் அதனுடன் தொடர்புடைய கப்பல்கள் மீது அடிக்கடி அவர்கள் தாக்குதல் நடத்திவருகின்றனர். இதில் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மற்ற நாடுகளின் வணிக கப்பல்களும் சேதமடைகின்றன. எனவே, அந்த வழியாக செல்லும் வணிக கப்பல்களை பாதுகாக்க அமெரிக்கா தலைமையில் ஒரு கூட்டுப்படை உருவாக்கப்பட்டது.

இந்தக் கூட்டுப்படையில் பிரிட்டன், ஜேர்மனி உள்ளிட்ட 20இற்கும் மேற்பட்ட நாடுகள் இணைந்தன. இந்தக் கூட்டுப்படையினர் செங்கடல் பகுதியில் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபடுகின்றனர். மேலும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினால் உடனடியாக பதிலடியும் கொடுத்து வருகின்றனர். இதற்கிடையே இஸ்ரேலின் டெல் அவிவ் நகரை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் சரமாரி ட்ரோன் தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தவுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்தார்.

இந்த நிலையில் இஸ்ரேல் மீதான தாக்குதலுக்குப் பதிலடியாக அமெரிக்கா மற்றும் பிரிட்டன் கூட்டுப்படையினர் ஏமன் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதல் காரணமாக விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டது. எனவே, இனி வரும் காலங்களில் பிரிட்டன், அமெரிக்க வணிக கப்பல்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படும் என ஹமாஸ் கிளர்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர். இதனால் அங்கு போர்ப்பதற்றம் மேலும் தீவிரமடைந்துள்ளது.

# கடும் வெப்ப அலை வீசுவதால் ஈரானில் அலுவலகங்கள் மூடல்

தெஹ்ரான், ஜூலை 30

ஈரானில் கடும் வெப்ப அலை வீசுவதால் அரசு அலுவலகங்கள் மூடப்பட்டன.

பகல் நேரங்களில் பொதுமக்கள் தேவையின்றி வீட்டை விட்டு வெளியேற வேண்டாமென அந்த நாட்டு அரசு அறிவுறுத்தியுள்ளது.

காலநிலை மாற்றம் என்பது தற்போது உலக நாடுகள் சந்திக்கும் மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அந்தவகையில் ஈரானில் கடும் வெப்ப அலை வீசுகிறது. குறிப்பாக தலைநகர் தெஹ்ரானில் 107 டிகிரி அளவுக்கு வெயில் கொளுத்தியது. இதனால் 200 இற்கும் மேற்பட்டோர் வெப்ப பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

வெப்ப அலை காரணமாக அங்கு மின்சார நுகர்வும் பல மடங்கு அதிகரித்தது. எனவே, மின்சார ஆற்றலை சேமிக்க அங்குள்ள வங்கி, அரசு அலுவலகம் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் மூடப்பட்டன. (எ)

# அமெரிக்கர்கள் இனி ஒருபோதும் வாக்களிக்க வேண்டியதில்லை?

சொல்கிறார் டொனால்ட் ட்ரம்ப்

புளோரிடா, ஜூலை 30

என்னை ஜனாதிபதியாக தெரிவு செய்தால் அமெரிக்கர்கள் இனி எப்போதும் வாக்களிக்க வேண்டியதில்லை என்று அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

இதுதொடர்பில் புளோரிடாவின் வெஸ்ட் பாம் கடற்கரையில் நடந்த பிரசாரத்தில் கிறிஸ்தவர்களிடையே உரையாற்றிய ட்ரம்ப், "நான் கிறிஸ்தவர்களை நேசிக்கிறேன். நான் ஒரு கிறிஸ்தவன். கிறிஸ்தவர்களே, வெளியே வந்து வாக்களியுங்கள். இன்னும் நான்கு ஆண்டுகள், நீங்கள் மீண்டும் வாக்களிக்க தேவையில்லை. நாங்கள் சரி செய்துவிடுவோம், அது உங்களுக்கே தெரியும்" என்று கூறினார். (எ)

## தாய்வானில் சர்வதேச மாநாடு; 6 நாடுகளுக்கு சீனா எச்சரிக்கை

பீஜிங், ஜூலை 30

அடுத்த வாரம் சர்வதேச உச்சி மாநாடு தாய்வானில் நடைபெறவுள்ளது. இதில் 25 இற்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கவுள்ளன. இந்த நிலையில், பொலிவியா, கொலம்பியா, சுலோவாக்கியா உட்பட 6 நாடுகளுக்கு சீனா ஒரு கடிதம் அனுப்பியது. அந்தக் கடிதத்தில் தாய்வான் மாநாட்டில் பங்கேற்க வேண்டாம் என சீனா தரப்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் விருப்பு வெறுப்புக்களுக்கு தேர்தலில் முன்னுரிமை கிடையாது!

## ஷெஹான் சேமசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 30

**தேர்தலில் அரசியல் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் நாடு தொடர்பில் சிந்தித்தே முன்னுரிமை அளிக்க வேண்டும் என நிதிராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலை மீண்டும் இந்த நாட்டில் ஏற்படக்கூடாது என்பதே மக்களின் எதிர்ப்பார்ப்பாகும்.

எனவே தனிநபர் விருப்பத்தின் அடிப்படையில் தேர்தலில் எவரும் வாக்களிக்க முடியாது. நாடு தொடர்பிலும் மக்கள் தொடர்பிலும் சிந்திக்கும் ஒருவரே இந்த நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படவேண்டும்.

நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தேர்தல் ஒன்றே இடம்பெறவுள்ளது. தற்போதைய ஜனாதிபதி நாட்டு மக்களின் ஒத்துழைப்புடனேயே பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை கட்டியெழுப்பினார்.

எனவே நாட்டின் எதிர்காலம் தற்போது மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. அதாவது மீண்டும் வீழ்ச்சிப்பாதைக்கு செல்வதா அல்லது அபிவிருத்தி அடைந்த நாடு என்ற ரீதியில் முன்னேறி செல்வதா என்பது தொடர்பாக மக்கள் தீர்மானம் மேற்கொள்ள வேண்டும்.

தேர்தலில் மக்களின் தீர்மானம் தவறாகும் பட்சத்தில் நாடு மீண்டும் 2022 ஆம் ஆண்டின் வீழ்ச்சிபாதை நோக்கிப் பயணிக்கும். அவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால் 5 வருடங்களுக்கு அந்த நெருக்கடி நிலைமை நீடிக்கும். எனவே தேர்தலில் அரசியல் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் நாடு தொடர்பில் சிந்தித்தே முன்னுரிமை அளிக்க வேண்டும்-என்றார்.

# 1,250 முன்னணிப் பாடசாலைகள் நட்பு பாடசாலைகளாக அபிவிருத்தி



கொழும்பு, ஜூலை 30

நாட்டிலுள்ள 1,250 முன்னணிப் பாடசாலைகள் வெகு விரைவில் நட்புப் பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யப்பட்டு கல்வி அமைச்சால் நேரடியாக நிர்வகிக்கப்படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இத்திட்டத்திற்காக சீன அரசாங்கத்திடமிருந்து 20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி பெறப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க மகளிர் உயர்தரப் பாடசாலையில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையிலான அனைத்து வகுப்பறைகளையும் சிநேகபூர்வ வகுப்பறைகளாக மாற்றும் வைபவத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்விடயங்களை தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய அவர்-

புதிய கல்வி முறை தொடர்பான முன்னோடித் திட்டம் அடுத்த வருடம் அமுல்படுத்தப்படும். இதற்கான ஏற்பாடுகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. இப்புதிய திட்டம் தரம் 01, தரம் 06 மற்றும் 10 வகுப்புகளுக்கு அமுல்படுத்தப்படும். இதற்கு தேவையான கற்றல் தொகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தேவையான புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு அச்சுபதிவுக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன-என்றார்.

(அ)

# நாட்டில் ஊழல் ஆட்சிக்கு செப்.21 இல் முற்றுப்புள்ளி

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

நாட்டில் ஊழல் ஆட்சிக்கு செப்ரெம்பர் 21 ஆம் திகதி முற்றுப்புள்ளி வைக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களின் விவசாய மாநாடு மொனறாகலையில் பகுதியில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துரைத்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ-

தற்போதைய இடைக்கால ஜனாதிபதி எப்படியாவது நாட்டில் மீண்டும் ஆட்சியமைக்கவே முயற்சிக்கின்றார்.

அதாவது அவரது பதவியை தக்க வைக்கும் நோக்கிலேயே செயற்படுகின்றார்.

இடைக்கால ஜனாதிபதிக்கும் அவரது சகாக்களான பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகியோருக்கும் நாம் ஒரு விடயத்தை தெரிவித்து கொள்கின்றோம்.

அதாவது இந்த நாட்டின் நீதித்துறையை சவாலுக்கு உட்படுத்த முடியாது.

அரசியலமைப்பை மீறி செயற்படும் தற்போதைய ஜனாதிபதி பதவியில் இருந்து விலக



வேண்டும்.

தற்போதைய அரசாங்கத்தில் 220 இலட்சம் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

தற்போது கள்வர்கள் அனைவரும் ஒன்றிணைந்து டீல் அரசியலில் உள்ளனர்.

சஜித் பிரேமதசாவை தோற்கடிப்பதற்காகவே இன்று கள்வர்கள் ஒன்றிணைந்து செயற்படுகின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

நாம் எந்தவொரு காலகட்டத்திலும் டீல் அரசியலில் ஈடுபட்டவர்கள் அல்ல.

ஆட்சியையும் பதவியையும் தக்கவைத்து கொள்வதற்காகவே இன்று பொருளாதார கொள்ளையர் கூட்டம் டீல் அரசாங்கத்தை அமைப்பதற்கு முயற்சிக்கின்றது-என்றார். (அ)

# நாட்டை வீழ்ச்சிப் பாதை நோக்கி நகர்த்தியோருக்கு இடம் இல்லை!

## கூறுகின்றார் அநுரகுமார

கொழும்பு, ஜூலை 30

நாட்டை வீழ்ச்சிப்பாதைக்கு கொண்டு சென்றவர்களை மீண்டும் இந்த நாட்டில் ஆட்சியமைப்பதற்கு மக்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

சிலாபத்தில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் மாபெரும் பேரணியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமூகத்தை திரட்டி மேல் தரப்பு கீழ் தரப்பு என இரண்டு அதிகாரங்களையும் இல்லாதொழிக்க வேண்டும் என சாதாரண அரசியல் இருப்பவர்ளுக்கு சொல்ல விரும்புகின்றேன்.

ஆட்சியில் இருப்பவர்களுக்கு தங்களது அதிகாரத்தை தக்க வைத்துக்கொண்டு பயணிக்க இன்று வாய்ப்பொன்று கிடைத்துள்ளது.

முன்னதாக மகிந்த ராஜபக்ஷ தரப்பிலும், ரணில் விக்கிரமசிங்க மற்றொரு தரப்பிலும் செயல்பட்டு வந்தனர்.

ஆனால் நெருக்கடி ஏற்பட்டபோது, இவர்கள் இருவரும் ஒன்றாக இணைந்தனர்.

அவ்வாறாயின் சாதாரண ஒரு அரசியலில் ஈடுபட இவர்களால் முடியாதுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி என்பது சாதாரணமாக ஆட்சி செய்யக்கூடிய ஒரு கட்சியாக இருந்தாக நான் நினைக்கின்றேன்.

எனினும், தற்போது ஐக்கிய தேசிய கட்சி என்ற ஒரு கட்சி இல்லாமல், அக்கட்சியின் தலைவர் சுயாதீன வேட்பாளராக போட்டியிட தீர்மானித்துள்ளார்.

முறையான ஒரு ஆட்சியை நடத்த முடியாமையே இதற்கான காரணமாகும்.

21 திகதி நடத்தப்படும் தேர்தலின் ஊடாக இவை அனைத்



தும் மாற்றமடையும் என்ற பாரிய நம்பிக்கை, எதிர்பார்ப்பு ஒன்று எமக்கு உள்ளது.

அதனை நாம் உறுதியாக நம்புகிறோம். நாட்டை வீழ்ச்சிப்பாதைக்கு கொண்டு சென்றவர்கள் மீண்டும் இந்த நாட்டில் ஆட்சியமைப்பதற்கு மக்கள் இடமளிக்கமாட்டார்கள்-என்றார். (அ)

# கஞ்சா கடத்திய டிப்பர் சாரதி கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணத்தில் இருந்து டிப்பர் வாகனத்தில் கஞ்சா போதைப்பொருளை கடத்தி சென்ற நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி பூநகரி பகுதியை நோக்கி பயணித்த டிப்பர் வாகனத்தை சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் பொலிஸார் வழிமறித்து சோதனையிட்டனர்.

அதன் போது , டிப்பர் வாகனத்தினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 கிலோ 485 கிராம் கஞ்சா போதைப்பொருளை பொலிஸார் மீட்டனர்.

அதனை அடுத்து டிப்பர் வாகனச் சாரதியை பொலிஸார் கைது செய்தனர்.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட டிப்பர் வாகனம், மீட்கப்பட்ட கஞ்சா போதைப்பொருள் என்பவற்றுடன் கைது செய்யப்பட்ட நபர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தலால் மூன்றாக பிரிந்தது சு.க.!

கொழும்பு, ஜூலை 30

மூன்று அணிகளாக பிளவுபட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியானது ஜனாதிபதி தேர்தலிலும் மூன்று வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்கின்றது.

இதன்படி ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக்கட்சியின் நிமல் சிறிபாலடி சில்வா அணி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கவுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் நாளை புதன்கிழமை வெளியிடப்படவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அணி, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு நேசக்கரம் நீட்டியுள்ளது.

சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தலைமையிலான அணியினர், ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாக களமிறங்கவுள்ளனர்.

# நீரில் மூழ்கி காணாமல்போன பாடசாலை மாணவன் மரணம்!

கொழும்பு, ஜூலை 30

அவிசாவளை, நாச்சிமலை நீரோண்டையின் கொனவல பகுதியில் நீரில் மூழ்கி 17 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவர் நேற்று முன் தினம் மாலை உயிரிழந்துள்ளதாக அவிசாவளை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் உயிரிழந்தவர் கஹதுடுவ, பொல்கஸ்ஹோவிட்ட பலகம பிரதேசத்தை சேர்ந்த, ஹொரண வித்யாரத்ன வித்தியாலயத்தில் 12 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவன் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மாணவன் பாடசாலையின் வலைப்பந்தாட்ட அணி வீரர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

10 பேர் கொண்ட குழு ஒன்று கப் வண்டியில் குளிப்பதற்குச் சென்றதாகவும், உயிரிழந்த பாடசாலை மாணவனும் மற்றுமொருவரும் திடீரென நீரில் குதித்து இருவரும் நீரில் மூழ்கி காணாமல்போனதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அப்போது, அங்கிருந்தவர்கள் உதவி கோரி கூச்சலிட்டதால், கிராம மக்கள் வந்து நீரில் குதித்து, ஒருவரை உடனடியாக கரைக்கு கொண்டு வந்த நிலையில், மற்றைய மாணவன் உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாமல்...

காது நாமல் ராஜபக்ஷ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி கட்சியின் ஒழுக்கத்தை மீறியுள்ளார் என்று குற்றஞ்சாட்டியே அமைச்சர் இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

எனினும், இந்த முறைப்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுக்கத் தமக்கு அதிகாரம் இல்லை என்று ஹோமாகம பொலிஸார் தெரிவித்தனர் என்று கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் நாமல் ராஜபக்ஷ தெரிவிக்கையில்,

"முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஜானக வெலிவத்தவின் அழைப்பின் பேரிலேயே அவரின் வீட்டுக்கு வந்தேன். அங்கு தேநீர் விருந்து ஒன்றில் பங்கேற்றேன். இதன்போது, கட்சியின் உறுப்பினர்கள் பலர் என்னை சந்திக்க வந்திருந்தார்கள். அவர்களுடன் நான் வழமையான விடயங்களையே கலந்துரையாடினேன்", என்றார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அமைச்சர் பந்துல குணவர்த்தன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் ரணில் ஆதரவு நிலைப்பாட்டை எதிர்த்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழரை...

தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், "நான் ஒரு விடயத்தை தெளிவாகக்கூற விரும்புகிறேன். தமிழ் தரப்பிலிருந்து பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் கடந்த 6 மாதமாக பேசப்பட்ட பிறகு வடக்கு, கிழக்கை நோக்கி வந்தவர்கள் - அவர்கள் யாராகவும் இருக்கலாம், இங்கு வந்து கொடுக்கின்ற வாக்குறுதிகளை நாங்கள் பார்க்கின்றோம்.

கடந்த வருடங்களில் இவ்வாறு அவர்கள் வடக்கை நோக்கி வரவில்லை. இந்த வருடம் நாங்கள் பொது வேட்பாளரை நிறுத்தப் போகிறோம் என்று கூறிய பிறகே வடக்கை நோக்கி வருகிறார்கள். தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு முன்பாகவே யாழ்ப்பாணத்தில் எங்கு பார்த்தாலும் அநாமதேய சுவரொட்டிகள் முளைக்கத் தொடங்கி விட்டன.

யார் எதை செய்தாலும் நாங்கள் ஒரு விடயத்தைத் தெளிவாக கூறுகிறோம். வடக்கு, கிழக்கு மக்கள் இவர்கள் பற்றி மிக தெளிவான சிந்தனைகளை கொண்டவர்களாக இருக்கிறார்கள். தமிழர் தரப்பில் பெரும்பான்மையான தமிழ் கட்சிகள் பொது வேட்பாளர் என்ற நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்கிறார்கள். அதைப்போல சிவில் சமூகத்தை சேர்ந்த பல பேர் இதனை ஏற்றுக்கொண்டு இதனை செயல்படுத்த வேண்டும் என்று இருக்கிறார்கள்.

எனவே, தமிழ் மக்களை எளிதில் ஏமாற்றி விடலாம் என்ற கொக்கரிப்புகள் நிச்சயமாக எடுபடமாட்டாது. என்னைப் பொறுத்த வரையில் பொது வேட்பாளர் என்ற மாற்றம் தேவையாக உள்ளது. இதனை உருவாக்குவதன் மூலமாகத்தான் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும். ஆகவே, ஒரு சிலர் மட்டுமே எதிரான கருத்துகளை கொண்டிருக்கிறார்கள். இந்த விடயம் தொடர்பில் மக்கள் ஒன்றாக அணி திரளும்போது இவர்கள் எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கப்போகிறார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தமிழ் தரப்பு இந்த விடயம் தொடர்பாக முடிவெடுத்தது தென்னிலங்கைக்கு ஓர் அச்சுறுத்தலாகவே இருக்கிறது. எனவே? இவர்கள் வடக்கை நோக்கி வருவதற்கு நாங்கள் எடுத்த முடிவே காரணம். எனவே தமிழ் தரப்பு முன்னோக்கி செல்கிறது என்பதே இதன் கருத்தாகும். இதை நான் முழுமையாக நம்புகிறேன் - என்றார். (ஐ)

## சம்பிரதாய...

நேற்று அவர் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் இந்த நாட்டின் 09ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான முக்கியமான தேர்தலாக அமையும். தற்போது பழைய அரசியல் கட்சிகள் சம்பிரதாய முறையில் அரசியல் பிரசாரத்தை தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நம் நாட்டின் வரலாற்றில், பல கிளர்ச்சிகளும் உள்நாட்டு போர்களும் நடந்துள்ளன. கடந்த ஆட்சிக்கு எதிராக போராட்டமும் நடந்தது. எனவே, மீண்டும் இதேபோன்று மூன்றாவது உள்நாட்டு போர் போன்ற நிலைமை உருவாகும் வகையில் மக்கள் தமது வாக்குகளை பயன்படுத்துவார்களா? அல்லது அவ்வாறானதொரு சூழ்நிலை ஏற்படாமல் தடுப்பதற்கு செப்ரெம்பர் 21ஆம் திகதி தமது வாக்குகளைப் பயன்படுத்துவார்களா என்ற கேள்வி உள்ளது.

மக்கள் சம்பிரதாயபூர்வமாக தமது அரசியல் சித்தாந்தங்களின்படி செயல்பட்டாலோ இல்லாவிடில் இலங்கை சமூகத்தில் நிலவும் குலம், சாதி என்பவற்றை வைத்து அரசியல் நோக்கில் செயல்பட்டாலோ மூன்றாவது உள்நாட்டுப் போரொன்று வெடிப்பதற்கான பொறுப்பை சம்பந்தப்பட்ட தரப்பினர் ஏற்க வேண்டும் என்பதை இந்நாட்டு அரசியல் கட்சிகள் நினைவில் கொள்ள வேண்டும்." - என்றும் கூறினார். (ஐ)

## சுயேச்சையாக...

நேற்று மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

2022ஆம் ஆண்டு எவ்வித நிபந்தனைகளுமின்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கினோம். ஆனால், கடந்த 2 ஆண்டுகாலமாக அவர் பொதுஜன பெரமுனவின் கட்சிக்கு முன்னுரிமை வழங்கவில்லை. மாறாக வீழ்ச்சியடைந்த ஐக்கிய தேசியக் கட்சியை எமது ஆதரவை கொண்டு பலப்படுத்தி பொதுஜன பெரமுனவை பலவீனப்படுத்த முயற்சிக்கிறார் - இதற்கு இடமளிக்க முடியாது.

காபந்து அரசாங்கத்தில் பொதுஜன பெரமுனவுக்கு பிரதமர் பதவியை வழங்குமாறு விடுத்த கோரிக்கைக்கு அவர் சாதகமான பதிலை வழங்கவில்லை. அத்துடன் பொருளாதார மீட்சிக்காக அவர் எடுக்கும் தீர்மானங்களுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்க முடியாது. அவரின் கொள்கைக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கினால் கட்சி முழுமையாக இல்லாதொழியும்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்று கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் யோசனை முன்வைத்தார்கள். எனவே, சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரை மொட்டு சின்னத்தில் களமிறக்க வேண்டும் என்று முன்வைக்கப்பட்ட யோசனை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் உறுப்புரிமையை பெற்றுக்கொண்டால் அவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கலாம் - அவருக்கு ஆதரவு வழங்கலாம் என்று அறிவுறுத்தினோம். ஆனால், அவர் அதற்கு மதிப்பளிக்கவில்லை. கட்சி என்ற ரீதியில் முழுமையாக விட்டுக்கொடுத்து செயல்பட முடியாது - என்றார். (ஐ)

# மருமகளை கத்தியால் குத்திய மாமியார் உட்பட 6 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 30

தனது மருமகளை கத்தியால் குத்தி காயப்படுத்திய குற்றச்சாட்டில் மாமியார் உட்பட ஆறு பேர் கைது செய்யப்பட்டனர் என்று மின்னேரியா பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் - நிகவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய மருமகளே இவ்வாறு காயமடைந்தார்.

காயமடைந்த மருமகள் கடந்த 27 ஆம் திகதி இரவு தனது கணவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது, இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் முற்றியது. இதில் மாமியார் மருமகளை கத்தியால் குத்தியுள்ளார்.

காயமடைந்தவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து, மோதலில் ஈடுபட்ட 6 பேரை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## ரணிலுக்கு 11...

அரசியல் குழு கூட்டம் நேற்று அதன் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

82 பேர் கொண்ட இந்தக் குழுவில் 79 பேர் கூட்டத்தில் பங்கேற்றனர். இதில், கட்சியின் சார்பில் வேட்பாளரை நிறுத்தும் முடிவுக்கு 11 உறுப்பினர்களே எதிர்ப்புத் தெரிவித்தனர். இவர்கள், ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்குமாறு வலியுறுத்தினர்.

இந்த நிலையில், கட்சி தவிர்ந்த வேறு ஒருவரை ஆதரிப்போருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் யோசனைக்கும் 6 பேர் மட்டுமே எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில் பெரமுன சார்பில் பொது வேட்பாளரை நிறுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. வேட்பாளர் யார் என்பது அடுத்த வாரம் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இந்து தலங்கள்...

இவர்கள் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கில் சிங்களபௌத்த குடியேற்றங்களை ஊக்குவிக்கின்றனர். இது பெரும்பான்மையான தமிழ், முஸ்லிம் மக்களின் மத உரிமை மற்றும் சொத்துகளுக்கு தீங்கு விளைவிக்கப்படுகின்றது.

26வருட ஈவிரக்கமற்ற உள்நாட்டு போரின் பின்னர் பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கை அரசாங்கம் 2009இல் தோற்கடித்தது முதல், வடக்கு - கிழக்கில் நிறுத்தப்பட்டுள்ள படைத் தரப்பினரும் செயல்பாட்டாளர் குழுக்களை கண்காணிப்பது, உடன்பட மறுத்தலை ஒடுக்குவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். மத சுதந்திரத்துக்கான உரிமையை அதிகளவில் மீறிவருகின்றனர்.

வடக்கு, கிழக்கில் உள்ள இந்து ஆலயங்களில் பௌத்த குருமாருடன் இணைந்து அதிகாரிகள் ஆலய விக்கிரகங்களை சேதப்படுத்தியுள்ளனர் அல்லது அகற்றியுள்ளனர். வழிபாட்டில் ஈடுபடுபவர்களை அச்சுறுத்தியுள்ளனர் - தாக்கியுள்ளனர் - கைது செய்துள்ளனர் - அவர்களின் வழிபாட்டு உரிமையை மறுத்துள்ளனர்.

நில அபகரிப்பின் மூலம் தமிழ், முஸ்லிம் மக்களின் சொத்துகளை அவர்கள் (அரசாங்கம்) இலக்கு வைத்துள்ளனர். சிறுபான்மை இனத்தவர்களின் கலாசார, மத அடையாளங்கள்மீதான அதிகரித்த ஒடுக்குமுறைகளால் நல்லிணக்கம் குறித்து அரசாங்கம் உரத்தகுரலில் பேசுவது போலியானதாக - வெறுமையானவையாக தோன்றுகின்றது.

ஏனைய மக்களை பலிகொடுத்து சிங்கள - பௌத்த தேசியவாதத்தை ஊக்குவிக்கும் மலினமான இந்த நடவடிக்கைகளை நிறுத்த சர்வதேசத்தின் ஒருங்கிணைந்த அழுத்தம் அவசியம் - இவ்வாறு மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான பிரதிஇயக்குநர் மீனாக்சி கங்குலி அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார். (ஐ)

## கொலை...

தொடர்பிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல உள்ளிட்ட 4 பிரதிவாதிகளுக்கு எதிரான இந்த வழக்கு நாளை புதன்கிழமை கண்டி மேல் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதற்காகவே, கெஹலியவை நீதிமன்றில் முற்படுத்துமாறு வெலிக்கடை சிறைச்சாலை அத்தியட்சகருக்கு கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி தர்ஷிகா விமலசிறி உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## வடக்கு...

உள்ளார். இரத்தினபுரியில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர்,

"ராஜபக்ஷக்களின் காவலனே ரணில் விக்கிரமசிங்க, சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உத்தியோகபூர்வமற்ற தலைவராகவும் அவரே செயல்படுகின்றார். ராஜபக்ஷக்கள் தனக்கு ஆதரவு வழங்கினால் வடக்கு, கிழக்கு வாக்குகள் கிடைக்காது என்பது ரணிலுக்கு தெரியும். அதனால்தான் அரசியல் சூழ்ச்சி பற்றி சிந்தித்துள்ளார். இதன் அடிப்படையிலேயே மொட்டு கட்சி வேட்பாளர் ஒருவரை களமிறக்குமாறு ரணில் கூறியுள்ளார். அவ்வாறு இல்லையேல் வடக்கு, கிழக்கு வாக்குகள் கிடைக்காது.

வடக்கு, கிழக்கு வாக்குகளை கொள்ளையடிப்பதற்காகவே ரணில், மொட்டு கட்சி வேட்பாளர் ஒருவரை களமிறக்குகின்றார். ஆனால், வடக்கு, கிழக்கு மக்கள் ஏமாறமாட்டார்கள். சஜித் பக்கமே நிற்பார்கள்." -என்றார். (ஐ)

## ரணிலுக்கு...

மேலும், நடந்து முடிந்த (நேற்று) அரசியல் குழுவின் கூட்டத்தில் தாமரை மொட்டு சின்னத்தில் வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. இதற்கு சில உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். எனினும், பெரும்பான்மையினர் ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் சார்பில் வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்பதில் உறுதியாக நின்றனர். தனால், மொட்டு சின்னத்தில் ஜனாதிபதி வேட்பாளர் நிறுத்தப்படுவார் - என்றும் சாகர கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தகுதியானவரை கட்சி ஆராய்ந்து வருகிறது. வெற்றிபெற அதிக வாய்ப்புள்ளவர் எதிர்வரும் நாட்களில் உத்தியோகபூர்வமாக சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக அறிவிக்கப்படுவார்.

இதேவேளை, கட்சியின் அனுமதியின்றி 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு எதிராகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கையை எடுப்பதற்கு எமது அரசியல் குழு தீர்மானித்துள்ளது - என்றும் கூறினார்.

நேற்று பொதுஜன பெரமுன கட்சியின் தலைமை பணிமனையில் சாகர காரியவசம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்படி விடயங்களைத் தெரிவித்தார். இதன்போது, "வேட்பாளரை அறிவிப்பதில் தாமதம் ஏற்படவில்லையா", என்று செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த காரியவசம், "வெற்றி பெறும் நேரத்தில் வெற்றி பெறும் வேட்பாளரை அறிவிப்போம்", என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சமஷ்டியை வலியுறுத்துவோருக்கு ஆதரவளிப்பது குறித்து பரிசீலனை

## சிறிதரன் எம்.பி. கருத்து



கிளிநொச்சி, ஜூலை 30

**தற்போதைய ஜனாதிபதி வேட்பாளர்களில் யாராவது சமஷ்டியை வலியுறுத்தி வடக்கு-கிழக்கில் தமிழர்கள் சுயாட்சியுடன் வாழ்வது தொடர்பாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தினால் அவர்களுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக தமிழரசுக் கட்சி பரிசீலனை செய்யும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.**

நேற்று முன் தினம் கிளிநொச்சியில் நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எனினும், எதிர்வரும் மாதம் 10, 11ஆம் திகதிகளில் மத்திய குழு கூடி பொது வேட்பாளரை ஆதரிப்பதா அல்லது தேர்தல் விஞ்ஞானத்தில் சமஷ்டியை வலியுறுத்தும் வேட்பாளரை ஆதரிப்பதா என்று முடிவு எடுக்கப்படும்.

இப்போதைய காலச் சூழல் அனைவரையும் ஒன்றிணைத்துச் செல்ல வேண்டும். ஒற்றுமையைக் குழப்பி பேசிக்கொண்டு இருந்தால் அடிப்படை அரசியலை கொண்டு செல்வதில் பிரச்னை உள்ளது.

மகிந்த ராஜபக்ச பிள்ளையானை நம்பி பொலிஸ் அதிகாரம் கொடுக்கலாமா என்று கேட்டிருந்தார். அதற்காகவே முன்னாள் நீதியரசரை களம் இறக்கி பொலிஸ் அதிகாரம், நிதி அதிகாரம் வழங்குமாறு கோரியிருந்தோம். எல்லோருடைய விருப்பத்திலேயே தெரிவு இடம்பெறறது-என்றார். (அ)

# அரகலய அமைப்பின் சார்பில் வேட்பாளராக நுவான் போபகே

கொழும்பு, ஜூலை 30

கோட்டபாய ராஜபக்ஷவை ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலக்கும் போராட்டத்தை முன்னெடுத்த அரகலய அமைப்பு, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரை நிறுத்தவுள்ளது.

மக்கள் போராட்ட முன்னணி என்ற பெயரில் சமீபத்தில் கட்சி ஒன்றை ஆரம்பித்த அரகலய அமைப்பினர், ஜனாதிபதி வேட்பாளராக சட்டத்தரணி நுவான் போபகே போட்டியிடுவார் என்று அறிவித்துள்ளனர்.

கொழும்பு பொது நூலகத்தில் நடைபெற்ற மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர்களை அறிவிக்கும் நிகழ்வில், கூட்டணியின் பிரதிநிதி லஹிரு வீரசேகர இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய சிக்கலான அரசியல் சூழ்நிலையில் இலங்கை மக்களின் அபிலாஷைகளை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் பொது மக்களின் போராட்டத்திற்கு தனது வாழ்க்கையை நுவான் போபகே கூர்மைப்படுத்தியதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட குடும்ப பெண்!

முல்லைத்தீவு, ஜூலை 30

ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நகரப் பகுதியில் கிணற்றிலிருந்து இளம் குடும்பப் பெண் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணை நேற்று முன் தினம் இரவு தொடக்கம் காணவில்லையென வீட்டார் மற்றும் அயலவர்கள், கிராமத்தவர்கள் இணைந்து தேடுதல் நடத்தியும் எங்கும் கண்டுபிடிக்க முடியாத நிலையில் நேற்றுக் காலை வீட்டு கிணற்றுக்குள் சடலமாக இருப்பதை அவதானித்த குடும்பத்தினர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

30 வயதுடைய இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் திருமணமான பின்பு கணவ வீட்டில் மாமன், மாமியுடன் வசித்து வந்ததாகவும், அவருக்கு 5 வயதுடைய ஒரு மகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை உயிரிழந்த பெண்ணின் கணவர் புலம் பெயர் நாடு ஒன்றில் வசித்து வருகின்ற நிலையில் இளம் குடும்பப் பெண்ணின் மரணம் குறித்த சந்தேகம் எழுந்துள்ளது.

உயிரிழந்த குடும்ப பெண்ணின் சடலம் பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ராஜபக்ஷவின் ஆசியுடன் பயணிக்கும் எவருக்கும் தேர்தலில் ஆதரவு இல்லை!

## சம்பிக்க ரணவக்க உறுதி



கொழும்பு, ஜூலை 30

ராஜபக்ஷவின் ஆசியுடன் செல்லும் எவருக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கடுவெல முல்லை புருமா விகாரையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே ரணவக்க இவ்வாறு கூறினார்.

அதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஐக்கிய குடியரசு முன்னணியின் தீர்மானம் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# யாழ். சிறைச்சாலையில் 75 தமிழக மீனவர்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 30

தமிழக கடற்றொழிலாளர்கள் 75 பேர் நீதிமன்ற உத்தரவில் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைதாகியுள்ளனர்.

பல்வேறு காலகட்டங்களில் கைதாகி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இவர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 64 பேரின் வழக்குகள் இன்று செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

கடந்த ஜூலை முதலாம் திகதி 25 கடற்றொழிலாளர்களும், ஜூலை 16ஆம் திகதி 04 கடற்றொழிலாளர்களும், ஜூலை 11ஆம் திகதி 13 கடற்றொழிலாளர்களும், ஜூலை 22ஆம் திகதி 22 கடற்றொழிலாளர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர். (அ)

# நீதிமன்ற தீர்ப்புக்களை விமர்சிப்பது பாரதூரம்!

## ஜீ.எல்.பீரிஸ் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 30

பாராளுமன்றின் வரப்பிரசாதங்களுக்குள் ஒளிந்து கொண்டு நீதிமன்ற தீர்ப்புக்களை விமர்சனம் செய்வது பாரதூரமான குற்றம் என பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

வாதுவ போதிராஜ விகாராதிபதி கோட்டே ஸ்ரீ கல்யாணி சமகி தம்ம மகா சங்க சபையின் மநாயக்கர் கொடபிடியே ராகுல தேரரை அரசியல் நிலைவரங்கள் குறித்து கலந்துரையாடியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அமோக வெற்றியீட்டுவார்.

ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்த போதிலும் அவை வெற்றியளிக்கவில்லை.

பொலிஸ் மா அதிபர் ஒருவர் இல்லாமை ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு தடையில்லை-என்றார். (அ)

# பெரமுனவின் 20 பேர் ஐக்கிய மக்கள் சக்திக்கு?

கொழும்பு, ஜூலை 30

பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் மேலும் 20 பேர் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணையவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாதுவ பகுதியில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல இதனை தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் புதிய அரசாங்கம் ஒன்றும் புதிய ஜனாதிபதி ஒருவரும் வெகுவிரைவில் தெரிவு செய்யப்படவுள்ள நிலையில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் பலமிக்க ஒரு கூட்டணி ஒப்பந்தம் அடுத்தவாரம் கைச்சாத்திடப்படவுள்ளது.

பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து 20 பேர் எம்முடன் இணையவுள்ளனர்.

அதாவது பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் ஊழல் மோசடியாளர்கள் எம்முடன் இணையவில்லை. மக்கள் நம்பிக்கையை வென்றவர்களுடனேயே நாம் கூட்டணி அமைக்கவுள்ளோம்.

எதிர்வரும் 8 ஆம் திகதி எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசவுடனான கூட்டணியில் இவர்கள் இணையவுள்ளனர்-என்றார். (அ)

# பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் முறையிடச் சென்ற சிறுமியை துஷ்பிரயோகம் செய்த பொலிஸ் பரிசோதகர்!

கொழும்பு, ஜூலை 30

பாலியல் துஷ்பிரயோக சம்பவமொன்று தொடர்பில் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு அளிக்கச் சென்ற சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

14 வயதுடைய சிறுமியொருவரே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளார்.

சிறுமியைக் கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்த இளைஞர் ஒருவர் தொடர்பில் முறைப்பாடு அளிப்பதற்காகச் சிறுமியும் சிறுமியின் தாயாரும் கடந்த 27 ஆம் திகதி குளியாப்பிட்டி, கந்தான கெதர பொலிஸ் நிலையத்திற்குச் சென்றுள்ளனர்.

இதன்போது, அங்கிருந்த பெண் பொலிஸ் அதிகாரி ஒருவர் சிறுமியிடம் வாக்குமூலத்தைப் பெற்று சிறுமியை அங்கே விட்டு சிறிது நேரம் வெளியே சென்றுள்ளார்.

இதன்போது, அங்கிருந்த உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இது தொடர்பில் அறிந்துகொண்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் சந்தேக நபரான உப பொலிஸ் பரிசோதகரை சம்பவ இடத்திலேயே வைத்து கைது செய்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தான கெதர பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org